தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, ஆடி 1 (16-7-'60). சனிக்கிழமை | இதழ் 5

இராசேந்திரர் வருகிறார்

ஆகஸ்ட் 15-ம் நாளன்று தமிழகத்திற்குக்

குடியரசுத்தலைவர் வருகிறார்

இந்திபற்றி அறிக்கை விடுத்து நம்மையெல்லாம்
வேதனையில் ஆழ்த்திய பெருமகனார்

ஊர்வலம் வரப்போகிறார்

முன்பொரு முறை பண்டிதநேரு அவர்கள்
இங்கு வந்ததுபோல் இப்போது

இவர் வருகிறார் !

தமிழகத்து அடிமைகள் அவரை வைத்துச்
சுதந்தரதினம் கொண்டாடப் போகின்றனராம் !

நம்முடைய துக்கத்தை - துயரத்தைக்

குடியரசுத்தலைவர் உணர்வாரா ?

பொய்

ஆ. மாதவன்

இப்பொழுது அவன் கண்ணெதிரில் அவன் தாயின் உருவம் நிறைந்த அமைதியுடன் மீண்டும் காட்சியளித்தது.

"அம்மா...!"

'ஓ'வென்ற பேரிரைச்சலுடன் உள்ளத்தில் அடங்கிய அத்தனை குமுறலும் அழுகையாகக் கொட்டிற்று!

சுவர்களுக்கப்பால் வெயில் கொதித்த வானப் பாழ்வெளியில் யாசகம் ஏந்திக்கொண்டு இலையற்ற மரங்கள் வெறிச்சிட்டு நின்றிருந்தன.

"கழுதை போல அழுகிருயே செய்வதையும் செய்துவிட்டு?" ஓர் அதட்டல்.

அலை சுருண்டு தெறித்தது போல மீண்டும், 'ஓ'வென்ற குமுறல், அவன் நெஞ்சை உதறிற்று.

அத்தனை பலவீனமான ஓர் உணர்ச்சிக்கு மனத்தை ஊசல்பொருளாக்கிவிட்டது ஒரு வகையில் பேதைமைதான். இத்தனை வயதிற்குப் பின்னரும் அந்தப் பேதைமை உணர்ச்சி பின்தொடர்வதென்றல் மனத்தைக் கட்டி நிறுத்தாத அறிவின்மையை என்னவென்பது?

சங்கிலிப் பிணைப்புகள் போல தொட்டுத்தொட்டுக் கடந்துவிட்ட கால எல்லையின் கருக்கலில். அந்த உணர்ச்சியின் மூல காரணம் அமைதியான கண்களுடன், வாஞ்சை நிறைந்த பாவனையுடன் மங்கலாகத் தெரிந்தது—

"அம்மா...!"

காரணமும், அகாரணமும், பொய்யும் உண்மையும், நன்மையும் தீமையுமான அத்தனைக்கும் அப்பால் அந்த 'உறவு' புனிதமாக. பிறந்த குழந்தையின் முதல் அழுகை போல, நிம்மதி அளிப்பதாக அவனுக்குத் தோன்றிற்று.

புறப்படும்போது அந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி ஏற்படுமென்று அவன் எண்ணவே யில்லை. ரயில் செல்லச் செல்ல எதிரே அமைதியாக உறங்கிக்கொண்டிருந்த அந்தப் பெண்ணை அவன் ஆராயத் துவங்கினன்.

அந்த உறக்கம், கருப் பையின் இருட்டில் பிறப்பின் முந்திய பொழுதில் அமைதியாகக் கைகளையும் கால்களையும் மடக்கிக்கொண்டு தலையைக் கவிழ்த்துத் தூங்கும் நிம்மதிபோல் அவனுக்குத் தோன்றியது.

காலத் தொலைவில் மறந்துபோன நிழலில் கோடுகளாக உருவம் அமைந்தாற்போல், எதிரே அந்தப் பெண்ணின் ஒவ்வோர் அசைவிலும் அவன் தன் தாயின் சாயலைக் காண ஆரம்பித்தான். கண்கொட்டாது அப்படியே அவளை வெகுநேரம் பார்த்துக்கொண்டிருந்த போது, விரையும் வண்டியின் தொலை வெளிக் காட்சி போல, கடந்தவை அத்தனையும் நினைவில் அழுத்திற்று. ஒரு கணம்தான். "அம்மா!" என்ற ஆதுரத்துடன், அந்தக் கைகளை மட்டும் தொட்டுப் பார்க்க வேண்டும்போல் தோன்றிவிட்டது; செய்துவிட்டான்.

இத்தான் விலே !

"முழி முழி என்று முழிக்கிறதைப் பாரு. உதைக்கணும் ராஸ்கலை! இவன்கள் எல்லாம் இருக்கிறதுனுலேதான் நாடே உருப்படாமப் போச்சு—"

குழுமியிருந்தவர்கள் அத்தனைபேரும் வாயில் அவச்சொல்லை வைத்துக்கொண்டு, கனி மரத்தில் கல் எறிவது போலக் குறியற்று வீசத் தொடங்கினர்.

"டேய் நட ஸ்டேஷனுக்கு. அங்கே வந்து சொல்ல வேண்டியதை அழு வண்டி புறப்படப் போவுது..."

அவனை இழுத்துக்கொண்டு காவலர்கள் நகர்ந்ததும் ரயில் புறப்பட்டது. அந்தப் பெண் எதையும் அறியாதவள் போல மீண்டும் பழைய இடத்திலேயே போய் அமர்ந்துகொண்டாள். இன்னும் தூங்குவாள்.

அவன் நடந்தான், காவலர் பின் தொடர. தவறு நிகழ்ந்துவிட்டது. கண நேரத்துச் சிலிர்ப்பு மானத்தையே இழுப்பதாக அமைந்துவிட்டது. நிதானித்திருக்கலாம்!-அவன் எண்ணினன்.

"அம்மாவிற்கு ஆள் அனுப்பிச்சிருக்கோம்; வருவாங்க! ராஸ்கல், இன்ஸ்பெக்டர் வரட்டும், உன்னைக் கவனிச்சுக்கிறேம். ரயிலில் போகிற பெண் பிள்ளையைத் தொட்டா பார்க்கிறே? அசந்திருந்தா முடிச்சை அவிழ்த்துக் கிட்டுப் போயிடலாங்கிற தந்திரம்... இரு. இரு, உன்னை..."

இருட்டிக்கொண்டே வந்தது. அவனுக்கு மூன்று நாள் சிறை வாசமும் உடல் நோக இம்சையும் தண்டனையாகக் கிடைத்தது.

தட்டு நிறையச் சோறு கொண்டு வந்து வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். உடலெங்கும் வேதனை உருண்டு வழியும்போது உணவு எதற்கு?

அவன் கருங்கல் சுவரில் தலைசாய்த்துக்கொண்டு அமர்ந்திருந்தான். மனத்தை ஏமாற்றியதால் மனம்ஏமாற்றி விட்டது. கண நேரத்துத் தடுமாற்றத்தில் விபரீதம் தலையில் கவிழ்ந்து விட்டது.

ஏதோ புலப்படாத குளிரான இரண்டு கைகளின் நீண்ட விரல்கள் அவன் கண்ணீரைத் துடைத்து, கன்னத்தில் ஆறுதலோடு இழைகின்றன!

"போகட்டும், அழாதே. இவர்களுக்கெல்லாம் என்ன தெரியும்? ஒன்றுமே அறியாதவர்கள். தங்களைப்போல் எல்லோரையும் நினைக்கிருர்கள். கண்ணுடியைப் பார்த்தால் முகம்தானே தெரியும்! உள்ளத்தை அறிய முடிவதில்லையே? பெண் என்றுல் பால் உணர்ச்சிக்கப்பால் வேறு பந்தமே இல்லையென்று நினைப்பவர்கள்! வெள்ளை பூசிய சுவராலும் உள்ளே சுட்டுப் பொசுக்கிய மண்கட்டிதானே இருக்கிறது...? அழாதே..."

அவன் உள்ளத்தில், ரயிலில் போய் விட்ட அந்தப் பெண்தான் பேசினுள். ஆனல் போய்விட்டவள் யாரோ? உள்ளத்தில் இருப்பவள்?

'அம்மா..." என்று அவன் முணுமுணுத்தான்,

சிறைக் கோட்டத்திற்கப்பால் தொலைவில். இருட்டான கால எல்லையின் ஆழத்தில். அவன் செத்துப்போன தன் தாயை நினைத்தான்.

வெள்ளை முகம். தெளிந்த கண்கள், உயரமற்ற அமைதி. "அம்மா" என்ற அழைப்பு சுகத்தின் கடைந்தெடுத்த உருவம்...

அம்மாவின் ஆள்காட்டி விரலை எட்டிப் பிடித்துக்கொண்டு, சின்ன நடை பயின்ற காலம் நிழலாக நினைவில் ஆடுகிறது. 'மழையில் நனையாதே-வெயிலில் அலையாதே-புழுதியில் விளையாடாதே!" என்றெல்லாம் சிரித்துச் சிரித்து அதட்டிய அன்பு. நெஞ்சு நிறைய அதை ஏற்றுக்கொள்ளு முன்பு அது காலத்தோடு போய்விட்டது.

அண்ணனும் தம்பியும் எல்லோரும் பார்த்திருக்க கண்ணைக் கடைவழியில் சொருகிக்கொண்டு ஒருநாள் செத்துப் போனுள். அன்று அழுவதற்குக்கூடத் தெரியவில்லை. எல்லோரும் அழுவதற்காகத்தான் அன்று அழுதான். காலம் வளர வளரத். தனக்கு அந்தப்பிணைப்பு முறிந்துபோனதை அறிய அறிய நெஞ்சில் ஏக்கம் கூடு கட்டிற்று. எது நிகழ்ந்தாலும்; "அம்மா இருந்திருந்தால்...?" என்று நீளமாக எண்ணிப் பார்த்து ஏங்கத் தோன்றியது.

அம்மாவை ஒத்த வயதினரையும் அதே சாயல் உள்ளவர்களையும் பார்க்கும்போதும் வயதான கிழவன் கூடத் தன் முதிய தாயை "அம்மா" வென்று அருகில் வைத்து அழைக்கும்போதும் அவனுக்கு நெஞ்சு சிலிர்த்தது அந்தப் பலவீனம் வளர்ந்த வினைதான் சிறையின் இருள் வாசத்தை வகுத்தது.

அந்த மூன்று நாட்களும் அவன் தனக்குள்ளாக அமைதியாகவே கடத்தினன். துயரத்திற்கு அழுகையும் பிரிவிற்குக் காதலும் தரும்—அமைந்த நிம்மதி போல அவனுக்கு அந்த மூன்று நாட்களும் சாரமற்றவைகளாகவே தோன்றின.

காலையில் சிறை வாசல் அவனுக்காகத் திறந்தபோது, இயற்கை மலர்ந்த சிரிப்புடன் அவனை வரவேற்றது.

பிறந்த குழந்தையின் முதல் அழுகையில் தாய்க்கேற்படும் நிம்மதி போல அவன் மனத்தில் ஒருவித நிம்மதியிருந்தது.

கண்களை விரித்தபோது வெளியுலகின் பரந்த தன்மையே அவனுக்கு "அம்மா"வாகத் தோன்றியது.

அவன் மீண்டும் தன் தாயைப்பற்றி எண்ணினன்.

பேராசிரியர் ம. கி. சண்முகம்
நினைவுச்சிலை நிதிக்காக

அறிஞர் அண்ணு
தலைமையில்

தியாகராயர் கவின்கலை மன்றத்தார்
நடிக்கும்

மணிநாட்டுக் கூனன்

வண்ணை, தியாகராயர் கல்லூரித்
திறந்த வெளி அரங்கில்
17 7—60 மாலை 6 மணிக்கு
நடைபெறும்.

கட்டணம்: ரூ. 3. 1, 0-50

புகழ்தேட வாராய்!

தொல்புவியை ஆண்டவனே
தமிழா! உன்றன்
துடுக்கெங்கே உயர்வெங்கே
வீர மெங்கே
கல்லெறிந்த பழக்குலைபோல்
ஆனுய் நாட்டின்
கண்மணியே திராவிடனே
களிறே இந்திச்
சொல்லறிந்த சூதாட்டக்
காரர் இன்று
சுகங்காணத் தென்னுட்டில்
நெளிதல்காணுய்!
புல்லர்களைப் புறம்கண்டு
தமிழைக் காத்துப்
புகழ்தேடக் குகைவிட்டுக்
கிளம்பி வாராய்!

—குலோத்துங்கன்

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!'

எண்ணம்

மலர் 7 ‖ 16-7-'60 ‖ இதழ் 5

கள்ள நோட்டுத் தொல்லை!

கொங்குச் சீமையில் உலவிய சமுதாய விரோதிகளின் செயல்கள் இன்று ஊர் தோறும் பேசப்படுகின்றன. "சமுதாயத்தின் உச்சக்கட்டத்தில் பெருமதிப் புடன் உலவிய அவர்களா களங்கத்தின் சின்னங்கள்?" என்று எல்லோரும் அதிர்ச்சியுறுமாறு பல உண்மைகள் வெளியாகியிருக்கின்றன. ஆலை உரிமையாளர் ஒருவர், காவல்துறை அதிகாரி ஒருவர், கொப்பரை வணிகர் ஒருவர் எனப்பல பேர் இதுவரை இந்த வழக்கில் பிடிபட்டிருப்பதாக அறிகிறோம். இத்தீச்செயலின் கிளைகள் முழுதும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. மொத்தத்தில் இவர்கள் பொதுமக்களை நீங்கா அச்சத்தில் ஆழ்த்தியதோடு, அரசாங்கத்தின் நிருவாகத் தையும் அறை கூவியிருக்கின்றனர். இக்கள்ள நோட்டுக் கழுகுகளைப் பிடிப்ப தற்குத் திறமையுடன் செயலாற்றிய காவல் துறையினர்க்கு நன்றி!

குற்றங்களைக் கூர்ந்தாய்ந்து அறிந்து, தக்க முடிவு தர இருக்கின்றனர் நீதிமன்றத்தினர். அரசாங்கக் கருவூலத்தமைப்புக்களையே புரட்டிப் போட்டுவிட்ட குற்றம் இது. பொதுமக்களுக்கும் அரசாங்கத்திற்கும் விடப்பட்ட அறைகூவல், இக்குற்றம். பெரிய மனிதர்கள், கள்ள நோட்டுத் தயாரிப்பதில் திறமைசாலி களாய் இருக்கலாம்! உலகச் சந்தையில் அவர்கள் எப்படிப்பட்ட பெரிய மனிதர் களாக இருந்தாலும் நீதிமன்றத்தின் முன், குற்றவாளி குற்றவாளியே! சாகசங் கள் பல செய்து சட்டத்தின் சந்து பொந்துகளைச் சாதகமாக்கிக்கொண்டு தப்பி ஓடப் பார்க்கலாம் அவர்கள்! "குற்றவாளிகள் தப்பிவிடாதவாறு செயல்பட வேண்டும் அரசினர்" என்பது பொதுமக்களின் விருப்பம்!

குற்றவாளிகள் தண்டனை பெறுவது ஒருபுறமிருக்கட்டும். ஏழை எளியவர் கள் இந்த அச்சத்தில் படும் தொல்லைகள் சொல்லிமாளா! ஆண்டு முழுதும் காடு திருத்திக் கழனியாக்கி, உழுது விதைத்துக் காத்து அறுத்ததை, நகரத்துச் சந்தைகளில் விற்றிருக்கின்றனர். விற்ற தானியங்களுக்கு அவர்கள் நகரத்துக் கொள்முதல்காரர்களிடம் பெற்ற நூறு ரூபாய் நோட்டுக்கள் இரண்டு மூன்று ஒவ்வொருவரிடமும் இருக்கக்கூடும். சூதுவாது அறியா ஏழை மக்கள், எதிர்காலத்தை எண்ணித் தங்கள் அறுவடைகளை 200, 300 ரூபாய்கட்கு விற்றிருக்கின்றனர். "வரும் திங்களில் மகளுக்கு மணம் முடிக்கலாம்!" என்றும், "அடுத்த உழவுக்குச் சொந்தத்தில் இரண்டு மாடு வாங்கலாம்!" என்றும், 'இரண்டு மாதங் கழித்து டெப்போவில் உரம் வாங்குவதற்கும், நாற்று நடவு-களையெடுப்பு-அறுவடை நாட்களில் கூலி கொடுப்பதற்கும், இப்பணம் பயன் படும்!" என்றும் அவரவர் தேவையை எண்ணி இப்பணத்தைச் சேமித்திருக் கின்றனர். கள்ளமறியா அம்மக்களைப் பலியாடுகளாக்கிக்கொண்டு, கள்ள நோட்டுக் கொள்ளைக்காரர்கள் விளையாடி விட்டிருக்கலாம். கிராமங்களிலே உள்ள ஏழை மக்கள் இன்று, "தங்களிடம் உள்ள நோட்டுக்கள் நல்ல நோட்டுக்கள் தாமா?" என்று ஐயப்படுகின்றனர். "வருமாண்டைய வேளாண்மைக்கு மனைவி யின் தாலியை விற்கலாமா? மகளின்சிறு நகையையும் காசாக்கலாமா?" என்றும் விழி பிதுங்குகின்றனர். போலீசுக்கு அஞ்சி வெளியில் கொண்டு வந்து காட்டவும் நடுங்கிச் சாகின்றனர்! சட்டத்தை எதிர்த்து நிற்கமுடியாத-கண்டதற்கெல்லாம் அஞ்சிநடுங்குகின்ற அந்த ஏழை உழவர்களின் ஐயத்தைத் தீர்த்து அமைதியைத் தர வேண்டியது, அரசினர் கடமை! எந்த உழவனிடத்திலாகிலும் கள்ள நோட்டுக் கள் இருக்குமாகில், அதை அவர்களிடம் தந்து ஏமாற்றிய கொடியவர்களைக் கண்டு பிடித்துத் தண்டிப்பதன் மூலம் கள்ளம் அறியாத ஏழையரைக் காக்க வேண்டுகிறோம். கொப்பரை வணிகரும் ஆலை உரிமையாளரும் குற்றக் கூண்டு களில் நிறுத்தப் பட்டிருப்பதால் நமக்கு இந்த ஐயமும் எழுந்தது; கிராமத்துத்து மக்களிடம் இந்த அச்சம் இருப்பதும் தெரிய வந்தது. எனவே, ஏழை எளியவர் களை அச்சத்தினின்றும் ஐயத்தினின்றும் விடுவிக்க அரசாங்கம் விரைவிலே ஆவன செய்யுமென்று நம்புகிறோம். ★

இவனே நேருவின் ஊழியன்?

- செல்லையா -

பொறியில் அகப்பட்ட எலியினைப்போல, வலையில் சிக்கிய மானினைப் போல வாடுகிறான் அரசாங்க ஊழியன் ஒருவன். அந்தத் துன்பச் சுமையைக் கடந்த இதழில் காட்டியிருந்தோம். இப்போது அவனுக்கு நேரிடையான எதிரி ஒருவனை, நாளும் உல்லாசக் கடலில் மூழ்கித்திளைத் தவனை உங்களுக்குக் காட்டுகிறோம். இவனை நமக்குக் காட்டியவர்கள் தில்லியிலுள்ள ஊழல் ஒழிப்புப் போலீசார்.

போலீசாரால் கொத்தப்பட்டுக் குற்றக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக் கும் அந்த ஊழல் கழுகின் பெயர் கே.சி.கோசலா. அவன் தில்லியரசின் நிரு வாகத்துறை ஒன்றின் துணைத் தலைமையாளன். அவன் பெற்ற மாதச் சம் பளம் ரூ. 2000 மட்டுமே. தில்லியில் 2000ரூ. சம்பாத்தில் இவன் நடத்திய வாழ்க்கை யெப்படி இருந்தது தெரியுமா?

பளிங்குக் கற்கள் தரையெங்கும் பரப்பிய அழகுரதம் போல் அவன் வீடு திகழ்கிறது. சன்னலைத் திறந்த புறமெல்லாம் மெல்லிய பூங்காற்றும், விழியைத் திருப்பிய இடமெல்லாம் ஒளி வெள்ளமும் விளையாடுகின்றன வாம். அவன் வீட்டு வேலிக்குள் வேலையாட்கள் குடியிருக்கும் பகுதிகள் கூடச் சலவைக் கற்களால் அழகுபடுத்தப்பட்டிருக்கின்றன. மேகம்போல் மின்னிமயக்கிய இந்த மாளிகைதான் காவல் துறையினரின் கண்களைத் திறந்து விட்டிருக்கிறது.

அவன் அரசினரிடமிருந்து 50,000 ரூபாயில் வீடுகட்டப் போவதாகச் சொல்லியே அதற்கான அனுமதியைப் பெற்று இருந்தான். ஆனால், அவன் கட்டிய வீட்டை எவ்வளவு குறைத்து மதிப்பிட்டாலும் ரூ. $2\frac{1}{2}$ இலட்சத் திற்குக் குறைத்து மதிப்பிட முடியாது. மாதம் 2000 ரூபாயே பெறுகின்ற வன், 50,000 ரூ செலவில் வீடு கட்டுவதற்கென்றே அனுமதிப் பெற்ற வன் கட்டிய வீடோ $2\frac{1}{2}$ இலட்சம் பெறுமானமுள்ளதாயிருக்கிறது. எப்படி வந்தது இது? காவல் துறையினர் கூர்ந்து பார்த்த பின்னரே, இது களங்கக் கோட்டம் என்றறிந்திருக்கின்றனர்.

அவன் விநியோக இலாகாவில் வேலை பார்த்ததனால், அவன் கட்டிய கட்டடத்திற்கும் ஏராளமான பொருள்கள் விநியோகிக்கப் பட்டிருக்கின்றன! அவற்றை விநியோகிக்கிறவர்கள் யார்? இனி அவன் அதை வெளியிட்டுத் தான் அறிய வேண்டும்! ஒன்றுமட்டும் தெரிந்திருக்கிறது, உறுதியாய். கட்டட வேலைகள் நடந்து கொண்டிருக்கும் போதே, அந்த வீட்டின் பேரில் ஓராண்டு வாடகையை முன் பணமாகப் பெற்றிருக்கிறான். தந்தது ஓர் ஆங் கிலக் கம்பெனி; தரப்பட்டது ரூ 33 ஆயிரம்!

தில்லி அரசாங்க ஊழியன் ஒருவன் கட்டடத்தைக் கட்டிமுடிப்பதற்கு முன்பே ஒரு வெளிநாட்டுக் கம்பெனி, அவனது கட்டடத்தை வாடகைக்கு எடுத்துக் கொள்ள வந்த அவசரம் என்ன? அவசியம் என்ன? — இவை யும் போலீசார் மனதில் ஐயத்தை வளர்த்திருக்கின்றன.

கோசலா, தில்லியில் இப்பதவிக்கு வருவதற்கு முன்னர் இலண்டனில் இந்திய அரசினரின் சேகரிப்புத்துறையில் பணியாற்றினான் என்பது குறிப் பிடத் தக்கது. அன்று ஆங்கில நாட்டில் பணியாற்றுகையில் அக்கம்பெனி யுடன் தொடர்பு ஏற்பட்டதா?

இத்தனை கேள்விகளுக்கும் விடைகாண அவன் வீட்டைச் சோதிக்கச் சென்ற போதுதான், காவல் துறையினரே வியக்கத் தக்க உண்மைகள் வாய்திறந்து சிரித்திருக்கின்றன. அவன் பீரோவில் 150 "சூட்"கள் பல வண்ணங்களில் விழி மயக்கிக் கொண்டிருந்தனவாம். அவை மட்டு மில்லை; அவன் வாழ்வின் கோணம் காட்டுவன போல், காலம் காட்டும் மணிப்பொறிகள் மட்டும் 12 அவனறையில் இருந்திருக்கின்றன. விரும்பிய போது ஏற்றவண்ணத்தில் உடுத்திச்செல்லக் கூடிய ஆடைகள் மட்டுமல்ல மணிப்பொறிகளும் பல வகைகளில் இருந்திருக்கின்றன. அவன் வேலை பார்த்த காலமெல்லாம் பெற்ற சம்பளத்தையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தாலும் $2\frac{1}{2}$இலட்சத்தில் வீடு கட்ட வழியில்லை. எனின் வீடு கட்டவும் பிற ஆடம்பர வாழ்க்கை நடத்தவும் பணம் கிடைத்தது எப்படி? ஆங்கிலக் கம்பெனி 33 ஆயிரங்களைத் தரவேண்டிய அவசரம் என்ன?

இந்த வினாக்களுக்குப் பதில் கூறும் படி, குற்றக் கூண்டிலே நிறுத்தப் பட்டிருக்கிறான் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டு. உங்கள் தீர்ப்பு என்ன? ★

முழக்கங்கள்

1. தொங்கும் மொழிக்கு இங்கென்ன வேலை?
மங்காத் தமிழ்தான் மடிவதோ நாளை
2. நாட்டைவிட்டு ஓட்டிடுவோம் இந்தி நாயை!
கோட்டை கட்டிக் காத்திடுவோம் தமிழ்த் தாயை!
—செல்லத்தரசு பீ. ஏ. (ஊர் தெரியவில்லை.)
3. தேக்கைக் கரையானும் அரித்திடுமோ-இந்தி,
தேன்சுவைத் தமிழையும் சிதைத்திடுமோ?
— அண்ணாத்தம்பி, கம்பம்.
4. இந்திமொழி இந்நாளே ஒழிந்தாலே
செந்தமிழும் வாழும் தன்னாலே!
—ப. அ. இசுமாயில், திருப்புத்தூர்.
5. தமிழ்ச்சோலை புகுந்திட்ட இந்திக்காளையே-நீ
தாங்காத சூட்டினைப் போடுவோம் இந்நவேளையே!
—புலவர் அரிமதி, திண்டிவனம்.
6. இந்திப் பரத்தைக்கு இங்கென்ன வேலை?
இதயம் கிழித்திட எறிவேன் வேலை!
—காரைச்செல்வி, கலைவளர் படிப்பகம், காரை.
7. சாக்காடுகாணவில்லையெனின் இந்தியைக் காண்!
பூக்காடு காணவில்லையெனின் தமிழைப் பார்!
—நாஞ்சில் மணியம், நாகர்கோவில்.
8. கதிரவனின் ஒளிமுன்னே கைவிளக்கு வெல்லுமோ?
எதிரில்லாத் தமிழ்முன்னே இந்திச்சொல் நிற்குமோ?
—புதுப்பதி-இளஞ்சிற்பி, புதுப்பட்டி.
9. சாக்கடை நீருக்குத் தங்கக் குடமா?
சத்தற்ற இந்திக்கு வைர முடியா?
10 மந்திமொழி இந்திக்கு மலர் மஞ்சமோ?
மாசற்ற தமிழுக்கு முலைதான் தஞ்சமோ?
—தி. வே. திருமாறன், திருவனந்தபுரம்.

ஊழியர்களை மதிக்காத ஊராள்வோர்கள் உரிமைக் குரல் கொடுக்கும் உழைப்பாளர்கள்

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்திலேயிருக்கும் காங்கிரசுக்காரர்கள் நாட்டின் நிலை உயர்த்தும் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று மக்கள் மன்றத்திலும் சட்ட மன்றத்திலும் மிகவும் வலியுறுத்திக் கூறி வருகின்றது கழகம் சொல்கிறதென்ற காரணத்தினாலேயே பல சிறந்த செயல்களைக்கூட அரசினர் அலட்சியப்படுத்திவிட்டனர் என்பதை அரசியல் நாகரிகப் பண்பும் தெளிவும் பெற்றோர் அறிவர். ஆட்சிப் பீடத்தின் மோகத்திலே அதிகார மமதையைத் தருகின்ற நேரத்திலேயெல்லாம் ஆளுகின்ற வாய்ப்பினைப் பெற்றுள்ள அமைச்சர்கள் அவசர அவசரமாக அவதூறுகளை அள்ளித் தருவார்களே தவிர அலட்சியப்படுத்தாமல் எந்த ஒரு வேண்டுகோளையும் அணுகிப் பார்க்கும் பாராட்டுக்குரிய பண்பும் பழக்கமும் அவர்களிடத்தில் இல்லை. காந்தியாரின் பெயர் கூறி ஆளுவோர் கண்ணெதிரிலேதான் இவர்தம் போக்கினை எதிர்க்கும் கண்டனக் கூட்டங்கள் நாள்தோறும் நடைபெற்றுக்கொண்டுள்ளன. யாரோ சிலர் மட்டும் அமைச்சர்களையும் அவர்களுடைய அதிகார அம்புகளையும் கண்டித்துவிட்டுக் கலைந்துவிடுவதாக எவரும் சொல்லிவிட முடியாது. பார் முழுவதையும் ஏர் முனையிலே காட்டி உழவன் பாட்டிலே தன் பெருமைகளைப் பேசிக்கொண்டாலும் அவனுடைய வாழ்வு வளமாகவில்லை-வஞ்சிக்கப்பட்டு நெஞ்சம் புண்ணாகியிருப்போரின் எண்ணம் புதுவாழ்வு நோக்கி நடைபோட முடியவில்லை! நிலவுடைமைக்கு வரம்பு கட்டுவதாகச் சொல்லி ஆட்சியாளர்கள் தந்துள்ள சட்டம் வேடிக்கைத் திட்டம் என்பதை எண்ணிப் பார்த்திடுவோர் எல்லோரும் கூறுகிறார்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு கொண்டு வரப்பட்ட ஒரு வரம்பு முறையைச் சரியான வழிவகைகளுடன் நிறைவேற்றத் தெரியவில்லை. ஓட்டைச் சட்டத்தைக் காட்டிவிட்டு விளைத்தாள் தருகின்ற விவேகம்-ஒழுங்கான செயல் முறைகளிலே நிலவரம்புச் சட்டம் நிச்சயமாக்கப்பட்டிருந்தால் பலன் காணும் பாட்டாளிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கும். அல்லல்பட்டு ஆற்றாது அழுவோரின் தொல்லைகளின் எல்லை குறைந்திருக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகம் இதனைச் சொல்லுகின்ற நேரத்திலேயே பஞ்சாலைத் தொழிலாளரிடையே இருக்கின்ற தேவைகளையும் எண்ணிக்கொண்டுதான் இருக்கிறது. அவர்களின் ஊதிய உயர்வினை எதிர்க்கின்ற காங்கிரசுக் கட்சியினரின் ஆளும் போக்குக் கண்டிக்கத்தக்கதென்று தீர்மானமும் நிறைவேற்றி ஆட்சியாளரின் மூடியுள்ள இதயக்கதவுகளைத் தட்டியுள்ளது. அரசினர் வங்கியில் அலுவல் பார்ப்போர் அத்தனை பேர்களும் சில மாதங்களுக்கு முன்னால் தங்களின் தேவைகளைத் தேடிப் பெற்றுக்கொள்வதற்காக வேலைநிறுத்தம் செய்து தீரவேண்டிய 'கட்டாய' நிலையினை ஆட்சியாளரின் ஆணவமும் ஆதிக்க வெறியும் ஊழியரைப் பழிவாங்கும் படலத்தில் நிறுத்திக் காட்டின! பலிபீடத்திலே நிறுத்தப்பட்டாலும் பங்கப்பட்டு வீழ்ந்திடுவோர் அமைச்சர்களாகவே இருப்பதையும் கழிந்துபோன நாட்களிலே கண்டோம். இந்திய அரசு தன்னைத்தானே உலகத்திற்கு அறிமுகப்படுத்திக்கொண்ட நாட்களிலிருந்து தொழிலாளர் குறிக்கோளினை இன்றளவும் நிறைவேற்ற முடியாத காரியமாகவே ஒதுக்கி வைத்துள்ளது. எத்தனையோ சந்திப்புகள், பேச்சு வார்த்தைகள் தூது போய்வருதல், இடையிலே சில தரகர்களை வைத்து விசாரித்துக் கொள்ளுதல், முடிவிலே முறித்துக் கொள்ளுதல், என்ற வழக்கத்தினை மறந்துவிடாமல் வைத்துக்கொண்டுள்ளனர். முன்போர் முறை அஞ்சல் நிலைய ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக முன்னறிவிப்புகள் வழங்கிய வேளையில் பல வாக்குறுதிகளை வாரியிறைத்தனர். வஞ்சக வலை விரித்தனரோ என்று எண்ணத்தக்க வகையில் நிகழ்ச்சிகள் அமைகின்றன. ரெயில்வே யூனியன் தொடர்புகொண்ட தொழிலாளர்கள் எவராக இருந்தாலும் அவர்களின் எந்த ஒருவேண்டுதலுக்கும் அரசியல் தொடர்பு தருகிறார்களே தவிரத் தக்கதோர் நியாயம் வழங்கவும் தகுதிக்கேற்ப உதவும் தயாராவதில்லை! அடிமை இந்தியாவில் அடிமை சர்க்காரில் நாம் இருக்கிறோம். என்ற உணர்வைத்தான் ஒவ்வொரு ஊழியரும் பெறவேண்டியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் சென்னையிலும் புது தில்லியிலும் ஆட்சி புரிகின்ற ஆணழகர்களுக்கு, ஆதிக்கப் பிடிகொண்ட அமைச்சர்களுக்கு தென்னகத்தின் தேவைகளை நினைவூட்டத் தவறியதில்லை என்பதனை மிகத் தெளிந்த அரசியல் அறிவினைப் பெற்றவரும் உற்றவரும், அதனைக் கற்றவரும ஒப்புக்கொள்வார்கள். பெரும் பெரும் ஆலைத் தொழிலாளர்களின் நீண்ட நாள் தேவைகளைத் தான் தண்டோராப் போடும் தமிழ்நாட்டு சர்க்காரால் நிறைவேற்ற முடியவில்லையென்றால் பீடித் தொழிலாளர் படும் வேதனையைக் குறைக்கும் மருந்தாவது இவர்களிடத்திலே உண்டா என்றால் நிச்சயமாக இல்லை! சேலம் மூன்று தாமரைப் பீடியிலிருந்து முக்கூடல் சொக்கலால் பீடிகள் இறுதியாக எல்லா முதலாளிகளும் முதலமைச்சர்களுக்கு விருந்துகள் வைத்துத் தங்களது நன்றியினைக் காட்டிக் கொள்ளும்போது புழுதியில் நெளியும் புழுவெனத் துடிக்கும் தொழிலாளர் நலன் பேணுகின்ற நல்லாட்சியை நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? அழுது துடிக்கும் பீடித் தொழிலாளர் துன்பக் கதைகளைக் கேட்பதற்கு வெங்கட்டராமன்களுக்குப் போதுமான ஓய்வு இருப்பதில்லை! கிடைக்கின்ற ஓய்வு நேரத்தில் முன்னேற்றக் கழகத்தைப் பற்றிப் பிரசங்கம் பொழிவதற்கு பேசிப் பழக வேண்டியுள்ளது! மின்னியக்கத்திலேயிருக்கும் தொழிலாளர்கள் தங்களின் குறைகளைச் சொன்னால் நீலகிரி மலைச் சரிவுகளின் அழகான காட்சிகளை ரசித்துவிட்டு வருவதுபோலக் கீழேயிறங்கி வந்து விடுகிறார்கள், வேலை நிறுத்தம் என்றால் இந்தப் பகுதியிலே ஆட்சியாளர்கள் செய்து காட்டிய ஆத்திர தாண்டவம் குருதி வெள்ளத்தைக் காட்டுகிறது; கண்டவர் சொன்னதைக் கேட்கும்போது மாண்டவர் தொகை எத்தனையோ என எண்ணிக் கலங்க வேண்டியுள்ளது குந்தாப் பகுதி மின்னியக்கத்தை, ஒரு தொழிலாளியைத் துவக்கி வைக்கும்படி கேட்டுக்கொண்ட பாரதப் பரந்தாமன் பண்டித நேரு அந்தத் தொழிலாளியின் தோழர்கள் மனைவியரும் துணைவர்களும் துப்பாக்கி வேட்டைக்குத் தங்களின் மேனியினைத் தீனியாக்கியபோது எதுவும் பேசவில்லை-அந்தச் சீமானுக்கெங்கே நேரம்?

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய இதயங்கனிந்த நட்பினையும் நல்லாதரவினையும் தொழிலாளர் பகுதியிலே வளர விட்டிருக்கின்ற முறையினை அரசியல் இலாபங்கருதி யெனச் சொல்லத் துடிக்கும் மாற்றார் எவரேனுமிருப்பின் அவர்களுக்காகப் பரிதாபப்பட்டு அனுதாபங்களைத்தான் அறிவித்துவிட வேண்டும்! சென்ற ஆண்டிலே ஆர்வி மில் தொழிலாளர்கள் மதுரையிலும் தூத்துக்குடியிலும் அம்பாசமுத்திரம் பகுதியிலும் வேலை நிறுத்தம் செய்து தங்களின் தொலைதூரத் தொல்லை நீக்கும் போக்கினை வேண்டிக்கொண்டனர். ஆட்சியிலே யிருக்கும் சர்க்காரின் கட்சியினர் இருபதினாயிரம் தொழிலாளர் நலன் காக்கத் தவறிவிட்டனர். ஆர்வி ஆலையின் ஆதரவாளர்களிலே ஒருவர் காமராசர்களின் கரங் குலுக்கி வெள்ளை முதலாளிகளுக்குப் பரிந்து பேசும் தரகராக இருப்பவர்-காங்கிரசுக் கட்சியின் சட்டசபை உறுப்பினர்! காங்கிரசு அமைச்சர் வெங்கட்டராமன் மதுரையிலே முகாம் வைத்து முதலாளிகளைச் சந்திக்கிறார். இருந்தா அமைச்சரின் செல்லுந்துச் சொல்லும் அங்கே தோல்விதான், செல்லாக் காசுதான் அவர் கனவுலகிலேகூடக் கழகத்தைக் கண்டிக்கத் துடிக்கும் 'கனம்கள்' என்ன சொல்கிறார்கள்? தொழிலாளரின் உழைப்பினாலே கழகத்தைச்செப்பனிடும்தேவையில்லாத திருப்பணி என்றைக்கும் எழப்போவதில்லை என்பதனை ஏமாந்த நேரத்தில் ஏற்றங்கொண்டிருக்கும் அமைச்சர்கள் அறிந்துகொள்வதும் நன்றாய்ப் புரிந்துகொள்வதும் நலமாகும். தனியார் துறைத் தொழிலாளர்களையும் அஞ்சல் ரயில்வே நிலைய ஊழியர்களையும் எத்தனையோ நாட்களாக-ஆண்டுக் கணக்கில், எத்தனையோ ஏற்கப் பொருந்தாத காரணங்களுக்காக வறுமைப் பிடியிலே சிக்க வைத்து வாழ்க்கைப் புயலில் துடிக்கச் செய்திருக்கிறார்கள். உழைத்துப் பிழைப்போர் தேவைக்கேற்ற வசதியினைப் பெற விரும்புவது பேதைமை என்று பெயர் தந்து விடுகின்றனர். மத்திய ஆட்சியினரும் மாநில அமைப்பிலேயுள்ளவர்களும் தொடர்ந்து நீண்டநாட்களாக இந்தத் தவற்றினைச் செய்து தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள இயலாமல் தவிக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டு பலவாகவே ஆட்சியாளரின் ஆகாத செயல் முறைகள் மற்ற மற்ற துறைகளிலே அதிகமாக இருந்தாலும், ஆள வந்திருப்பவர்களுக்கு ஆதரவாளராக இருக்கும் ஊழியர்களுக்கு ஊதியம் தருவதிலே தயக்கம் தேவையற்றதெனத் தெரிவித்துள்ளது. ஊர்ந்தது உயர்ந்தால் ஊராள்வோருக்கு உள்ளத்திகில் வருமென்பது உண்மையாகிவிட்டது. இதனைப் பல வேளைகளில் நாம் கண்டிருக்கிறோம்! சென்னை அரசினரின் அலுவலாளர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ஓர் லட்சத்திற்கும் மேல் என்று கணக்கிட்டு வைத்திருக்கிறார்கள்! எல்லாத் துறையிலும் இவர்கள் பங்கேற்றுள்ளார்கள்! இவர்களுடைய வேதனைக் குரலைக் கேட்டுக் கேட்டு சலிப்புற்ற அமைச்சர்கள் இரண்டாண்டுகளுக்கு முன்னாலே ஒரு குழுவினை அமைத்து விசாரிக்கச் செய்தனர். விசாரணைக்குப்பின், விளக்கமானதும் விரிவானதுமான அறிக்கையினை ராமுன்னி மேனன் தலைமையிலே இயங்கிய குழுவினர் அரசாங்கத்திடம் அளித்துள்ளனர். அதனை முழு அளவில் வெளியிடும் நெஞ்சுரம் இன்றும் அமைச்சர்களுக்கு வரவில்லை! ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்திவிட்டோம் என்று உரக்கப் பேசுவதற்குக் காரணமாக இருப்பது அந்த அறிக்கைதான்! அரசினரின் புதிய சம்பள விகிதத்தினாலே சாதகங்களும் பாதகங்களும் பரவி நிற்கின்றன. பாதிக்கப்படுவோரின் சார்பில் பாராட்டுப் பெறுகின்ற வாய்ப்பினை சென்னை அமைச்சரவையினர் பெற்றுக்கொண்டுள்ளனர்! நிர்வாகத் துறையினர் பலரையும் சந்தித்துக் கேட்டால், அமைச்சர்கள் செய்துள்ள உதவி, கசப்பான மருந்தைச் சிறிது தேனில் கலந்து கொடுப்பதுபோல உள்ளதென்றுதான் சொல்கிறார்களே தவிர முழுவதுஞ் சுவையான செய்தியினைச் சொல்ல அவர்களாலே முடியவில்லை-காரணம் வீம்பல்ல, உண்மைக்குத் திரையிட்டு மறைக்கும் விவேகமுமல்ல, அரசினரின் அறிக்கையிலேயுள்ள குழப்பங்களின் கணக்கு!

திராவிட முன்னேற்றக் கழகம் பல ஆண்டுகளாகவே பணியாற்றியிருப்பதுபோல ஆட்சியாளர்கள் தங்களுடைய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வினை அளித்துள்ளார்கள்-ஆனால் அதிலே சரியான தெளிவில்லை என்பதுதான் பல என் ஜி ஓ நண்பர்களின் எண்ணமாகும்! மொத்தக் கணக்கீட்டில் ஒவ்வொருவருக்கும் ரூ 16 அதிகப்படுத்தியிருப்பதாகச் சொல்லப்படுகிறதே அன்றி கணக்கிட்டுப் பார்க்கும்போது நான்கு ரூபாய்மட்டுமேதான் பலருக்கும் கிடைத்திருப்பதாகும் என சென்னை மாநில என். ஜி. ஓ. தலைவர், வேலூர் மாநாட்டுத் தலைமையுரையில் நிதியமைச்சரெனப்படும் சுப்பிரமணியம் என்பவரிடம் மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார். மதி மந்திரியாரும் நீதி நிறைந்த உள்ளத்துடன் அதனை ஒப்புக்கொண்டு, உள்ளத்திலே ஆவல் அதிகமிருந்தாலும் உள்ளதைக் கொண்டு ஆறுதல் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்! ஆட்சியாளரின் அறிக்கையை இருபதாம் தேதி வெளியிட்டதற்கே அடிப்படை 26-ம் தேதி வேலூர் மாநாட்டில் கலந்துகளிடத்திலே நிதியமைச்சர் பெரிய

— 10-ம் பக்கம் —



டட்லி சேனநாயக்கா

தேர்தல் களத்தில் இலங்கையர்

பண்டார நாயக்காவின் வாழ்வேடு சிதைக்கப்பட்ட நாள் முதலாக, தொடர்ந்து நிலையான ஆட்சியில்லை, இலங்கையில். 26-9-59 அன்று பண்டார நாயக்கா சாவின் வாயில் வீழ்ந்தார். அவரையடுத்து தக நாயக்காவின் அமைச்சரவையும், 4-12-60 அன்று கலைக்கப்பட்டது பின்னர் 19-3-'60 அன்று நடந்த பொதுத் தேர்தலில். நூற்றுக்கு முப்பது வாக்குகளையும் மொத்தத்தில் 50 இடங்களையும் பெற்று ஆட்சி அமைத்தது யூ என் பி. நாளடைவில் அதுவும் கவிழ்ந்து, இன்று இன்னொரு பொதுத் தேர்தலை எதிர்நோக்கியிருக்கிறது, இலங்கை.

எதிர் வரும் 20-ம் நாளாகிலும் இலங்கை மக்களுக்கு ஒரு நிலையான அரசாங்கத்தை அமைக்க வேண்டும். அன்றுதான் இலங்கை மக்கள் ஒரு புதிய ஆட்சிக்கு வாக்களிக்கப் போகின்றனர்.

இலங்கைப் பாராளும் மன்றத்தில் 157 இடங்கள் உள்ளன. இவற்றுள் 6 இடங்கள் நியமன உறுப்பினர்களுக்கு உரியனவாகும். 76 இடங்களுக்குமேல் கைப்பற்றுகின்ற கட்சிதான் நிம்மதியாக ஆட்சி செலுத்த முடியும்.

இத்தேர்தலில் அணிவகுத்து நிற்கும் கட்சிகளுள் குறிப்பிடத்தக்கன, யூ. என். பி., எஸ். எல். எப். பி:, எல். எஸ். எஸ். பி, சி. பி., எம். இ. பி, எப். பி. முதலியவையே.

ஐக்கிய தேசியக் கட்சி (யூ. என் பி) நாற்பத்தி இரண்டு வயது நிரம்பிய டட்லிசேனநாயகாவின் கட்சியாகும். இவர் இப்போது மூன்ரும் முறையாகத் தலைமை அமைச்சர் பதவியில் இருக்கிருர். நன்கு படித்தவர். தனிப்பட்ட வாழ்க்கையில் அமைதியான மனிதர். பௌத்த கொள்கையில் பிடிப்புள்ளவர். இவரும் இக்கட்சியும் அன்னிய மூலதனத்திற்கும் ஆரத்தி எடுக்கும்; உள்நாட்டு முதலாளித்துவத்திற்கும் வாழ்த்துப் பாடும் மேட்டுக் குடியினருக்கு இந்தியாவில் காங்கிரசென்ருல் இலங்கையில் யூ. என். பி.! இலங்கையின் முதல் சுதந்தர அரசை மறைந்த ஸ்டீபன் சேனநாயக்கா அவர்கள் தலைமையில் அமைத்ததும் இந்தக் கட்சியே.

சிரீலங்கா சுதந்தரக் கட்சி (எஸ். எல் எப். பீ.) மறைந்த பண்டார நாயக்கா அவர்களது கட்சியாகும். பண்டார நாயக்காவின் மனைவியார் சிரீமாவோதான் இப்போது இக்கட்சியின் தலைவியாக உள்ளார். இன்று நாட்டுப்புற மக்களின் எண்ணத்தைக் கவர்ந்துள்ளது இக்கட்சியே!

சில ஆண்டுகளுக்கு முன் சிரீலங்கா சுதந்திரக் கட்சி, விப்லவகாரி சமாசக் கட்சி, சிங்கள பாசா பெரமுன முதலிய கட்சிகள் ஒன்று சேர்ந்து உருவாக்கப்பட்டதுதான் மகாசன எச்சத்பெரமுன (எம். இ பி.) பின்னர் அக்கட்சிகளெல்லாம் பிரிந்தன. ஆனாலும் எம். இ பி. என்ற பெயர் மறையாது, இன்றும் பிலிப் குணவர்த்தன அவர்களின் தலைமையில் இயங்குகிறது கடந்த தேர்தலில் இக்கட்சி பலத்த ஆர்ப்பாட்டத்தோடு போட்டியிட்டது. தோல்வியும் பலத்ததாயிருந்தது. நல்ல பாடத்தைக் கடந்த தேர்தலில் படித்துக்கொண்டதால், இத்தேர்தலில் தனியே ஏறத்தாழ 50 இடங்களுக்குப் போட்டியிடுகிறது. ஆனால் நம்பிக்கையின் ஒளி தெரியவில்லை.

இலங்கைப் பொதுவுடைமைக் கட்சி (சி. பி.) தோழர் பீட்டர் கெனமனின் செல்வாக்கால் வளர்ந்து வரும் இயக்கம். இலங்கை அரசியலில் நன்கு படித்துள்ள பெருமக்களுள் தோழர் கெனமனும் ஒருவர். நெடு நாட்களாய் இலங்கைப் பாராளும் மன்றத்திலும், கொழும்பு நகராண்மைக் கழகத்திலும் அங்கம் வகித்தவர், கெனமன்.

லங்கா சமசமாசக் கட்சி (எல். எஸ் எஸ். பி.) இலங்கைச் சமதர்மவாதிகளின் தனிக் கட்சியாகும். இக்கட்சி, தோழர் என். எம். பெரரா தலைமையில் இயங்குகிறது.

சிரீலங்கா விடுதலைக் கட்சியும் இலங்கா சமசமாச அணியும், இலங்கைப் பொதுவுடைமைக் கட்சியும் தொகுதி உடன்படிக்கை செய்துகொண்டுள்ளன. இம்மூன்று இயக்கத்தவரும் ஒருவர் போட்டியிடும் இடத்தில் அடுத்தவர் போட்டியிடாது விட்டுக்கொடுத்து மொத்தத்தில் யூ. என். பியை எதிர்க்கின்றனர். இவர்களது கூட்டுச் சக்தியை முறியடிக்க, டட்லி சேனநாயக்காவின் யூ. என் பி. மிகுந்த முயற்சி எடுத்துள்ளது. காபந்து அரசாங்கம் அதன் கையிலிருப்பதால் மக்களைக் கவர, அது பல்வேறு ஆதிகாரங்களைப் பயன்படுத்துகிறது.

அரசாங்க நிதியைப் பயன்படுத்தி, பங்கீட்டுக் கடைகளில் தரப்படும் அரிசியின் விலையைக் குறைத்துள்ளது. அதனுல் கோடிக்கணக்கான ருபாய்கள் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படுகிறது. கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிக்குழந்தைகள் பள்ளிக்குச் சென்று வருவதற்கான பஸ் வசதியை இலவசமாக்கும் ஆலோசனையை வெளியிட்டுள்ளது. 1958-ம் ஆண்டில் வேலை நிறுத்தம் செய்த அரச ஊழியர்களுக்கு. அது நடந்த பத்து நாட்களுக்கும் பண்டார நாயக்கா அரசாங்கம் சம்பளம் தரவில்லை. அதை டட்லி சேனநாயக்கா இப்போது வழங்கியிருக்கிருர், தம் அதிகாரத்தைக் கொண்டு. அரிசியின் விலையைக் குறைத்தும், பஸ் வசதி செய்தும், பத்துநாள் சம்பளம் தந்தும், டட்லி எதிர்பார்த்த ஆதரவு கிட்டவில்லை. மாருக இவரது செயல்கள் எதிர்க்கட்சியினரின் புயல்வேகப் பிரசாரத்திற்குத்தான் உதவியாயிருக்கின்றன.

யூ. என். பியினர், இனவெறியைச் துணைக்கழைத்து வருகின்றனர். வெற்றி மகுடம் சூட்டிக்கொள்ள, இலங்கையின் அண்மை வரலாறு இனக்கலவரங்களால் மிகவும் களங்கப்பட்டிருக்கிறது. என்ருலும், ஏழைச் சிங்களவர்கள் மீண்டும் அந்த வலையில் விழத் தயாராயில்லை. ஏற்கனவே பட்ட துன்பங்கள் ஒரு புறமிருக்க, யூ என். பியினர் தாம் பதவி பெறுவதற்கே இதை நினைவூட்டுகின்றனர் என்பதை அனைவரும் புரிந்துகொண்டுவிட்டனர்.

யூ. என். பியினர் மற்ருெரு தேர்தல் தந்திரத்தையும் கையாளுகின்றனர். கேரளத்தில் பொதுவுடைமையரை வீழ்த்த மன்னத்திற்கு ஒரு பள்ளிப் பிரச்னை அகப்பட்டது. அதே மாதிரியான பள்ளிப் பிரச்னைதான் இப்போது யூ. என். பியினருக்கு உயிரூட்டுகிறது. பள்ளிகளையெல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொண்டு நடத்தவேண்டும் என்று, காலஞ்சென்ற பண்டார நாயகாவும் பிற எல். எஸ். எஸ் பீ., சி. பி. போன்ற எதிர்க்கட்சியினரும் கருதினர்; இப்போதும் கருதுகின்றனர். கேரளத்தைப்போலவே இங்கும் கிறித்தவச் சமுதாயத்தினரே பள்ளிச் சிக்கலில் அக்கறை கொண்டிருக்கின்றனர். இங்குள்ள பள்ளிகளில் பெரும்பாலானவை, மக்கள் தொகையில் நூற்றுக்கு ஏழே பேரான கிறித்தவர்கள் கையில்தான் உள்ளன செல்வத்திலும் கல்வியறிவிலும் பெரிய இடத்தைப் பெற்றுள்ள இவர்கள், தாம் தோற்றுவித்த பள்ளிகளை அரசினர் கையில் ஒப்படைக்க விரும்பவில்லை. அன்னரின் இந்தப் போக்குக்கு ஆதரவளிக்கின்ருர் டட்லி. அதன்மூலம் "பெருத்த ஆதர"வை மாதாகோவில்களிலிருந்து பெற்றிருக்கிருர், டட்லி. தேர்தலுக்கு எந்த ஆதரவைத் தேடுவர் என நான் எழுதவேண்டியதில்லை.

★

மாண்ட பண்டார நாயகாவின் மனைவியான சிரீமாவோ பண்டார நாயக்கா எஸ் எல். எப். பியின் தலைவியானதால், நாடெங்கிலும் சுற்றிவந்து தன் கட்சியை எடுத்துச் சொல்கிருர் பண்டார நாயக்காவின் பெயரை விற்றுப் பிழைக்க நினைக்கிருர்கள் என்ற குற்றச்சாட்டை யு. என். பி. யினர் கிளப்பிவிருக்கின்றனர். தேர்தல் களத்தில் அம்மையார் மறைந்தவரின் பெயரை விற்றுப் பிழைத்தாலும், அது தவறில்லை. அம்மையார் மனத்தினுள் உள்ள ஓர் எண்ணம் அவரது கட்சி எப்படியும் வெற்றிபெற்ருக வேண்டும் என்பதே.

அம்மையார், தனது கணவரின் கொள்கைகளைப் பரப்ப எவ்வகையிலும் அருகதை அற்றவர் என்று தோழர் எம். டி. பண்டா (யூ. என். பி) குற்றம் சாட்டுகிருர். அவர் கட்சியான யூ. என். பி 80 முதல் 85 இடங்கள் வரைபெற்று நிலையான அரசை அமைக்கும் என்றும் சொல்கிருர். பண்டா இப்போதைய அரசின் உணவு மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சராக உள்ளார் பண்டார நாயக்கா தன்னுட்களில் இலங்கை சம சமாசக் கட்சியை மிகவும் கண்டித்தார் ஆனுல் அந்தக் கட்சியுடன் தான் இத்தேர்தலில் அம்மையார் கூட்டுச் சேர்ந்திருக்கிருர். இதை வைத்துத்தான், "கணவன் கண்டித்த கட்சியுடன் கூட்டுவைத்திருக்கும் மனைவி, எப்படிக் கணவனின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லிக்கொள்ள முடியும்?' என்று வினுத் தொடுக்கிருர், பண்டா.

சரீமாவோவின் பேச்சொன்றை வைத்துக் கணித்தால் தோழர் இரிய கொல்லையை "இலங்கையின் கள நேசன்" என்று வருணிக்கலாம். டட்லி சேனநாயக்காவால் கட்டறுத்து விடப்பட்டிருக்கும் இரியகொல்லையும் சிரீமாவோவைத் தாக்குகின்ருர். "நம்பாதீர் இந்த அம்மையாரை. நாட்டை மார்க்சீய வாதிகளின் கையில் ஒப்படைக்கப் பார்க்கிருர்!" என்று குற்றம் சாட்டுகிருர் தோழர் இரியகொல்லை.

"கடந்த மார்ச்சில் அம்மையார் கவர்னர் ஜெனரலாக வர முயன்ருர்; முடியவில்லை. இப்போது முதலமைச்சராகவாகிலும் வர முயல்கிருர். அதுவும் நடக்காது!" என்று இரிய கொல்லை எச்சரிக்கை விடுகிருர். "அம்மையார் இத்தேர்தலில் போட்டியிடவில்லை! பின் எப்படி உறுப்பின

— 8-ம் பக்கம் —

மரிக்கார்

தீர்ப்புக் காண்பர் ஜூலை 20-ல்

12. உணர்ச்சிக் குழப்பம்!

உலகப் பழி என்பது இருக்கிறதே, அதற்குப் பயப்படாதவர்கள் மனிதரல்ல. இந்த உலகப் பழியைப்பற்றி அறிஞர்களிடையே மட்டுமல்லாமல் மக்களிடையேயும்கூட இரு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன.

உலகம் பழிக்கும் என்பதனுல்தான் இன்று உலகத்தில் ஓரளவு யோக்கியத் தன்மையும், நல்ல பண்பும் நாகரிகப் போக்கும் நிலவுகிறதென்று சொல்ல வேண்டும். இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். கடவுளுக்குப் பயப்படுகிறவர்கள்கூடத் தீமை புரிவதற்கு அஞ்சுவதில்லை. இன்னும் சொல்லப் போனுல் தீயதொரு காரியத்தை அல்லது கள்ளச் சந்தை வியாபாரத்தைக்கூட, வெற்றிகரமாக முடித்துத் தரும்படி கடவுளுக்குப் பூசை போட்டுவிட்டுத்தான் ஆரம்பிக்கிருர்கள். ஆனுல், உலகத்துக்குப் பயப்படுகிறவர்கள் அப்படியல்ல. எங்கே தான் செய்கிற காரியம் வெளிக்குத் தெரிந்துவிடுமோ? தெரிந்துவிட்டால், வெளியே தலை காட்டமுடியாதே என்று அஞ்சி நடுங்குகிருர்கள். தன் முரட்டுத்தனத்தால் மற்றவர்களை அரட்டி மிரட்டும் தன்மை வாய்ந்த குண்டனுக இருந்தாலும் சரி, தன் பணப் பெருக்கால் எதையும் திரை போட்டு மறைத்துவிடலாமென்று எண்ணுகிற முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவனுயிருந்தாலும் சரி, தன் பதவி அதிகாரத்தால் எதுவும் வெளிவராதபடி செய்துவிடக்கூடிய வசதியுள்ளவனுகவிருந்தாலும் சரி, தன் ஆணவம், அதிகாரம், செல்வம் எல்லாவற்றையும் கடந்து எங்கே தன் தீய செயல் வெளிப்பட்டுவிடுமோ என்று பயந்து நடுங்குகிருன்.

எப்படிப்பட்டவன் எவ்வளவு மறைமுகமாக ஒரு கொடுமையையோ, தீமையையோ செய்தாலும் அது எப்படியும் வெளிப்பட்டே தீரும். உலகம் எதையும் நெடு நாளைக்குத் தன்னகத்தே அடைத்து வைத்திருக்காது. அது உலக இயற்கை. பூமியின் வயிற்றில் தங்கமோ, நிலக்கரியோ வைரமோ புதைந்து கிடந்நாலும்கூட அதுவும் ஒரு நாள் வெளிப்பட்டுவிடுகிறது. வையகத்தின் குடலுக்குள்ளே ஓடிக்கொண்டிருக்கும் நெருப்புக் குழம்பு என்ருவது ஒரு நாள் எரிமலைவாயிலாக வெடித்துக் கிளம்பத்தான் செய்கிறது. எதையும் என்றும் அடக்கி மறைத்துக் காக்காத இயல்புடையது இவ்வுலகம். இந்தச் சடப் பொருள்கள்மட்டுமல்ல. காற்றில் இருக்கின்ற ஒலியணு மாத்திரமாக உள்ள இரகசியங்களும்கூட இந்த விதிக்கு-இயற்கைக்கு-விலக்கானவையல்ல. அவையும் ஒரு நாள் வெளிப்பட்டே தீரும். யாரும் காணுத இடத்திலேயிருந்து தன்னந்தனியாகவே ஓர் அக்கிரமத்தைச் செய்துமுடித்தவன்கூட, என்ருவது ஒரு நாள் அந்த இரகசியச் செய்தியைத் தன் நெஞ்சிலே புதைத்து வைத்திருக்கமாட்டாமல் வெளியிட்டு விடுவான்.

அந்தக் கொடுமையின் இரகசியம் சிறிது வெளிப்பட்ட உடனேயே உலகம் அவனைப் பார்த்தும் பார்க்காமலும் பழிக்கத் தொடங்கிவிடும். ஆகவே தான், நல்லறிவு மிக்க சான்ருேர்கூட உலகப் பழிக்கு மிகவும் பயப்பட்டார்கள்; பயப்பட்டுவருகிருர்கள்.

நல்லவர்கள் உலகப் பழிக்கு ஏன் பயப்பட வேண்டும் என்னும் போது தான் நாம் அந்த உலகப் பழியைப் பற்றிய இரண்டாவது கருத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. சில சமயம் இந்த உலகப் பழி அடிப்படையே இல்லாமல் ஏற்பட்டுவிடும்.

பனைமரத்தின் கீழிருந்து பாலைக் குடித்தாலும் அது பாலென்று நம்பாது இந்த உலகம். "பார்! பார்! இவனைப் போய் நல்லவனென்று எண்ணிக் கொண்டிருந்தோமே, இப்போதல்லவா தெரிகிறது இவன் வண்டவாளம்" என்று பழிக்கத் தொடங்கிவிடும். இதற்காகத் தான் "கண்ணுல் கண்டதும் பொய்; காதால் கேட்டதும் பொய்; தீர விசாரித்தறிவதே மெய்" என்று சொல்லுகின்ற வழக்கும் ஏற்பட்டது. ஆனுல், உலகம் அப்படித் துப்பறியும் வேலையில் ஈடுபட்ட பிறகா தன் பழி வாயைத் திறக்கிறது? 'நான் பார்த்தேன் அவனும் அவளும் ஒன்ருக இருந்ததை' என்று ஒருவர் சொல்ல, 'அவளை அழைத்தது நன்ருக என் காதில்விழுந்தது' என்றுகூட இருப்பவர் கூற 'உலகத்திலே யோக்கியன் என்று சொல்லத் தகுதி வாய்ந்தவன் யாருமே கிடையாது என்று மூன்ருமவர் முடிவு கட்டி விடுவார் இப்படியாக ஒருவனைப் பற்றிய பழிச்சொல் எவ்விதமான உண்மை ஆதாரமுமின்றியே ஒன்றுக்குப் பத்தாகப் பத்துக்கு நூருக வளர்ந்து பெருகிவிடும். இந்த உலக இயல்பைக் கண்டு தான் மிக உயர்ந்த ஒழுக்க நெறியில் வாழ்க்கை நடத்தும் பெரியோர்கள், எங்கே தங்களை உலகம் தவருகப் புரிந்துகொண்டு பழிக்கத் தொடங்கிவிடுமோ என்று எப்போதும் மிகவும் எச்சரிக்கையாக இருப்பார்கள்.

ஒரு முறை உலகப் பழிக்கு ஆளாகிறவன், அந்தப் பழியைத் துடைத்துக்கொள்வதென்பது மிகவும் அரிய செயல். எவ்வளவுதான் அவன் உண்மை விளக்கங்கள் கூறினுலும் அவற்றை நிலைநாட்டுவது அரிது.

சான்ருேர்கள் எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும்கூடச் சமயத்தில் உலகப் பழிக்கு இலக்காகி விடுகிருர்கள் என்று சொன்னேமல்லவா அந்தக் கதி நமது தங்கத்திற்கும் ஏற்பட்டது.

தங்கமான பண்புடைய தங்கத்துக்கா இந்தப் பழி? பழிக்கப்படும்படி அவள் என்ன செய்தாள்? இது என்ன அநியாயம்? இந்த உலகத்தில் நீதியேயில்லையா? உண்மைக்கு இங்கே இடமேயில்லையா? என்று உங்கள் உள்ளம் துடிக்கலாம். உங்களுக்கு மட்டுமல்ல, கந்தசாமி வாத்தியாருக்கும், மரகத அம்மாளுக்கும் கூடத்தான் இந்தப் பழிப் பேச்சு காதில் விழுந்தபோது இந்த மாதிரியான ஆத்திரம் ஏற்பட்டது.

அவர்களுக்கு நன்ருகத் தெரியும், தங்கத்திற்கு முருகேச வாத்தியாரின் பிள்ளை நடராசன் மீது சிறிதுகூடக் காதல் கிடையாது என்று. ஆனுல் அந்த நெய்யூர் முழுக்க, நேரில் கண்டது போல் என்ன பேசிக்கொண்டார்கள் தெரியுமா? "தங்கத்திற்கும் நடராசனுக்கும் காதல் உண்டாகிவிட்டது. நடராசன் அவளைக் கூட்டிக்கொண்டு ஓடிப்போய்விட்டான். ஆனுல் விஷயமறிந்ததும், பயந்துபோய்த் திரும்பவும் கூட்டிக்கொண்டு வந்து விட்டுவிட்டான்." இப்படித்தான் ஆங்காங்கே கணவனும் மனைவியும், அத்தானும் மச்சானும், அண்ணியும் நாத்தியும், நண்பர்களும் தோழர்களும் தத்தமக்குள்ளே பேசிக்கொண்டார்கள். "தங்கமா? சே! சே! அப்படி யிருக்கவேயிருக்காது, நான் நம்பவே மாட்டேன்" என்று யாராவது மறுத்துச் சொன்னுல் "உள்ளதுதான்! தங்கம் நல்ல பெண் தான். ஆனுல், வயதையும் பருவத்தையும் யோசித்துப் பார்த்தாயோ? பஞ்சும் நெருப்பும் ஒன்ருய் இருந்தால் என்ன ஆகும்?" என்று கேட்டு அடித்துச் சொன்னுர்கள் பேச்சைத் துவக்கியவர்கள்.

எப்போதும் பழி கூறுபவர்கள் தங்கள் கூற்றை மெய்யாக்கிக் காட்ட முயல்வதும், அதைக் கேட்பவர்கள் கடைசியில் உண்மையென்று நம்பி விடுவதும்தான் வழக்கம். அப்படி நம்பாதவர்கள் யாரேனும் இருந்தால் அவர்கள் பெரிய ஞானிகளாகத்தான் இருக்க வேண்டும்.

தங்கத்தைப் பற்றி ஊரார் பேசிக் கொண்டதையும், பழி தூற்றியதையும் கேட்டுக் கந்தசாமி வாத்தியார் துடித்தார்.

மரகத அம்மாளோ வாய்விட்டு அழமாட்டாமல் அடுப்படி மூலையிலே குந்திக் கொண்டு ஒரே கவலையாக 'உம்'மென்று இருந்தாள். தங்கத்தின் காதில் முதன் முதல் இந்தச் செய்தி விழுந்தபோது அவளுக்குச் சிரிப்பாக இருந்தது. நெய்யூர்க்காரர்கள் எல்லோருமே கற்பனைக் கதை எழுதுவதற்கு மிக மிகப் பொருத்தமானவர்கள் என்று அவள் எண்ணினுள். ஆனுல், வர வர அந்தப் பேச்சு வளர்ந்து எங்கும் பரவிய போக்கினைக் கண்டபோதுதான், அது எவ்வளவு தூரம் தன் மானத்தைப் பாதிக்கக் கூடிய ஆற்றலுடையதாயிருக்கிறது என்பதை உணர்ந்தாள்.

ஊர்ப்பழி என்று ஒன்று ஏற்பட்டு விட்டால், அது காதலர் இருவருக்கிடையேயும் உண்டாகிய காதலை மேன்மேலும் வளர்க்கும் என்று சொல்லுவார்கள். அந்தக் காதலுக்கு ஊர்ப் பழியே உரமாக அமையும் என்று கூறுவார்கள். ஆனுல் தங்கம் தான் நடராசனைக் காதலிக்கவில்லையே-காதலித்தால் அல்லவா அந்தக் காதல் வளரும் அல்லது, ஊர் என்ன சொன்னுலும் அதை உறுதியோடு வளர்த்து வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும்?

அவளுக்கு நடராசன் மீது ஏதோ ஒரு விதமான அன்பு இருந்தது என்பது உண்மைதான். ஆனுல் அந்த அன்புக்குப் பேர் காதல் என்று அவள் நினைக்கவில்லை. நடராசனுடைய உருவத் தோற்றம் அவளுக்குப் பிடித்துத்தான் இருந்தது. அழகான அந்த உருவத்தை முதன் முதல் அவள் கண்டபோது பிரமித்துப் போனவள்தான். ஆனுல், அவன் ஒரு பைத்தியக்காரன்-அதிலும் ஒரு கை முடவன் என்றறிந்த பிறகு அவளால் அவனைத் தன்னேடு உடன் வைத்து எண்ணிப் பார்க்கவே துயரமாக இருந்தது. பிறகு அவனுக்குப் பைத்தியம் தெளிந்துவிட்டது என்று கண்டபோது அவனைப்பற்றி அவள் நல்லெண்ணம் கொள்ள ஆரம்பித்தாள். அவனுடைய அறிவு மணம் கமழும் பேச்சுக்களைக் கேட்டபோது அவளுக்குத் தன்னையறியாமல் ஒரு பெருமையுணர்ச்சிகூட உண்டாகியது என்றுதான் சொல்ல வேண்டும். அவனை யாரும் பைத்தியம் என்று பழித்தால் கூட அவளுக்குக் கோபம் வந்தது. ஆனுல், அப்போதும் அவள் அவன் தன்னுடன் இணைத்துப் பேசப்படத் தகுதியுள்ளவன் என்று நினைக்கவில்லை. கூறைபட்ட அவனுடைய கையைக் காணும்பொழுதெல்லாம் - அல்லது நினைக்கும்பொழுதெல்லாம் அவனுக்கும் தனக்கும் எவ்விதமான பொருத்தமும் இல்லையென்றே அவள் எண்ணி வந்தாள்.

அவனுக்கும் தனக்கும் எவ்விதமான பந்தமும் ஏற்பட விரும்பாத அவளைப் போய்-அவன்மீது ஆசைப்பட்டுக்கூட ஓடிப் போய்விட்டாள் என்று ஊர் பழித்துப் பேசியதை நினைத்துப் பார்த்தபோது அவளுக்கு முதலில் சிரிப்பாக வந்தது. போகப் போக எரிச்சலாக வந்தது.

அதுமட்டும் உண்மையான காதலாக இருந்திருந்தால், ஊர் எவ்வளவுதான் பழித்திருந்தாலும் அவளுக்குத் தங்கள் இருவரையும் ஊரார் இணைத்துப் பேசுவது இன்பத்தைக் கொடுத்திருக்கக் கூடும். ஆனுல், அவள் பேருக்குக் கூட நடராசன் மீது காதல் கொள்ளவில்லையே, அது அவளுக்கு இன்பத்தை எப்படித் தரும்? ஆனுல், நடராசனைப் பொறுத்த வரையில் அந்தப் பழி உண்மையில் அவன் நெஞ்சில் இன்பநீர் பாய்ச்சியது என்றுதான் சொல்ல வேண்டும்.

நடராசன் சுத்தப் பைத்தியக்காரனுய் இருந்தபோதே அவன் மனம் தங்கத்தின்மேல் பதிந்துவிட்டது. அந்தப் பைத்தியக்கார நிலையிலும் அவன் தங்கத்தைத் தன் பெண்டாட்டியாக்கிக்கொள்ள விரும்பினுன். அவ்வாறு ஆக்கிக்கொள்வதால் தனக்கு நன்மையுண்டென்று அவன் எண்ணினுன். பிறகு பைத்தியம் தெளிந்து அறிவு வளர வளர, அவன் தங்கத்தின் மேல் வைத்திருந்த மதிப்பு மேலோங்கியது. தங்கத்தைப்போல் ஒரு குணவதியை, அறிவுச் செல்வத்தை, அமைதிக் கடலை உலகத்தில் காண்பது

அரிது என்று கருதக் கருத அவனுக்கு அவள் மேல் இருந்த அன்பும் வாஞ்சையும் அதிகமாயின. அவன் வெளியிலே காட்டிக்கொள்ளாவிட்டாலும், தங்கத்தைப் பார்க்கப் போகிறோம் என்று எண்ணியபோதே பரவசமடைந்தான். அவளோடு பேசிக்கொண்டிருக்கும் வாய்ப்புக் கிடைத்தால் அதுவே பேரின்பம் என்று மகிழ்ச்சியுற்றான். அவள் தன்னிடம் அன்பாகப் பேசுகிறாள் என்று நினைக்கும்போதே அவன் நெஞ்சு பெருமிதத்தால் விம்மியது. அவளுக்கும் தனக்கும் ஒரு காலத்தில் மணப் பேச்சு நடந்தது என்பதை அறிந்தபோது அவனுக்கு அந்தச் செய்தியே தேன்போலிருந்தது. அன்று இரவு அவளுக்குத்தான் வழித்துணையாகப் போக வாய்த்த சந்தர்ப்பத்தை எண்ணியபோது அவனுக்கு அது ஒரு நல்ல வாய்ப்பாகப்பட்டது, ஆனால், அவளைத் திருப்ப வந்து இருட்டில் தேடித் தேடிப் பார்த்துக் காணாமல் ராதா வீட்டுக்குத் திரும்பியபோது அவன் நெஞ்சு பட்டபாடு நெருப்புப் பிடித்த பஞ்சுப் பொதிகூடப் பட்டிருக்காது. தங்கத்தைக் காணவில்லை என்ற நினைப்பே அவன் அங்கத்தையெல்லாம் அணுத்தோறும் அணுத்தோறும் வாள் கொண்டறுப்பது போலிருந்தது. அதன் பிறகு, அவன் தங்கத்தைக் கண்டு பிடிக்கும் வரையிலே வெறி கொண்டவன் போல் அலைந்துகொண்டிருந்தான். அவளைக் கண்டு பிடித்து அந்த ராக்கப்பனிடமிருந்து மீட்டுக்கொண்டு வந்து வீட்டில் விட்ட பிறகுதான் அவனுக்கு மனத்திலே அமைதி பிறந்தது. அப்போது அவன் தனக்கு உரிய பொருளொன்றைக் காப்பாற்றிவிட்டது போன்ற நெஞ்ச நிறைவை அடைந்தான். இப்போது ஊரார் தன்னையும் அவளையும் இணைத்துப் பேசியதைக் கண்ட அவனுக்குப் பெருமையாக இருந்தது; பேரின்பமாகவும் இருந்தது. ஆனால், பாவம் தங்கத்தின் மனப்போக்கை மட்டும் அவன் அறிந்திருந்தால் எத்தனை தூரம் வருத்தப்பட்டிருப்பான்! அவள் தன்னை விரும்பவில்லை—தான் இத்தனை ஆர்வத்தோடு காதலிக்கும் அந்தப் பூங்கொடி தன்னைத் தழுவிப் படர மறுக்கிறது—மனமில்லாமலிருக்கிறது என்ற உண்மையை அறிந்தால் அவன் உள்ளம்—அந்தக் கள்ளம் கபடமில்லாத நல்ல உள்ளம் - எவ்வளவு வேதனைப்படும் என்பதை அந்த நிலையில் இருந்து பார்ப்பவர்களே உணரலாம்.

தங்கத்தையும் நடராசனையும் இணைத்துக் கதை பேசிப் பொழுது போக்கிய ஊராரின் பழியைக் கேட்டு மனக் கிலேசம் கொண்ட இதயம் இன்னொன்று இருந்தது. அது யாருடைய இதயம் என்பதை நாம் சொல்லாவிட்டாலும் வாசகரே இந்நேரம் யூகித்துக் கொண்டிருக்கலாம்.

அந்த உள்ளம் ஊராரின் பேதைமையை எண்ணி ஒரு கணம் சிரித்தது. உண்மையில்லாத இந்தப் பழிப் பேச்சு மட்டும் உண்மையாக இருந்தால் எப்படியிருக்கும் என்று எண்ணிப் பார்த்தபோது வெந்து நொந்தது. தங்கத்தைப் பற்றிப் பேசப்படுகின்ற விஷயங்கள் உண்மையாக இருந்து அந்த இடத்தில் தங்கத்திற்குப் பதிலாகத் தான் இருக்கக்கூடாதா என்று எண்ணி ஏங்கியது. ஆனால், அந்த இதயத்துக்குரியவள் தன் எண்ணத்தில் ஏற்பட்ட இந்த உணர்ச்சிகளைப் பற்றி வாய்விட்டு வெளிப்படையாக யாரிடமும் தெரிவிக்காமலே இருந்தபடியால் அது யார் என்பதை நாமும் வெளிப்படையாகச் சொல்லாமல் இவ்வளவோடு நிறுத்திக் கொள்கிறோம்.

தங்கத்திற்கு வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பது என்னவோ மாதிரியிருந்தது. இவ்வளவு நாளும் அந்த வீட்டிற்குள்ளேயேதான் அடைபட்டுக் கிடந்தாள். வீட்டை விட்டால் தோட்டம் தோட்டத்தை விட்டால் வீடு என்று மாறி மாறி யிருந்து வந்தாள். வெளியில் அவள் யார் வீட்டுக்கும் போய் எந்தப் பெண்களோடும் பேசிப் பழகியதில்லை. அவளுக்குப் பழக்கம் நட்பு என்பதெல்லாம் ராதா ஒருத்தியிடம்தான். ராதாவிடமும் அவளுடைய வீட்டுக்குப் போய்த் தங்கம் பழகி வரவில்லை. ராதாதான் பெரும்பாலும் தங்கம் வீட்டுக்கு வருவாள். அவள் பத்துத் தடவை வந்தால் தங்கம் ராதா வீட்டுக்கு ஒரு தடவை போவாள். அதுவும் ராதா மிகக் கட்டாயமாகச் சொல்லி இழுத்துக்கொண்டு போனால்தான் உண்டு. அன்று என்னவோ தங்கத்திற்கு வீட்டிற்குள் இருப்பது பெருங் கட்டாயமாக இருந்தது. தோட்டத்திற்குப் போகக்கூடிய நேரமாக அது இல்லை. காலையிலோ மாலையிலோ என்றால் தோட்டத்துக்குப் போகலாம். உச்சியிலிருந்து அப்போதுதான் கதிரவன் மேற்கில் இறங்க ஆரம்பித்து இரண்டு மணி யாகியிருந்தது. அந்த நேரத்தில் தோட்டத்திற்குப் போக முடியுமா?

தங்கத்திற்கு வீட்டைவிட்டு எப்படியும் வெளியே போக வேண்டும் என்று ஒரே முனைப்பாக இருந்தது. அவள் மனத்தில் ஏற்பட்ட உணர்ச்சிக் குழப்பத்தை யாரிடமாவது கொட்டித் தீர்த்துக்கொள்ள வேண்டும் போல் இருந்தது. அம்மாவிடம் போய், "அம்மா, ராதா வீட்டுக்குப் போய் வருகிறேன்" என்று சொன்னாள்.

மரகத அம்மாள் தன் மகள் விருப்பத்தை எப்போதும் மறுக்கக்கூடியவள் அல்ல. அவள் இப்போது விரும்பியதும் யோசித்து விடை சொல்ல வேண்டிய விஷயமல்ல. ஆகவே, "போய் வாம்மா" என்று விடை கொடுத்தனுப்பினாள்.

தங்கம் ராதா வீட்டுப்படியில் கால் வைத்தபோது, ராதா கதவைத் திறந்துகொண்டு வெளியில் கால் வைத்தாள். தங்கத்தைக் கண்டவுடன் அவள் புன் சிரிப்புடன், "தங்கம், நமக்குள் எவ்வளவு மன ஒற்றுமை பார்த்தாயா? உன்னை உடனடியாகப் பார்க்க வேண்டும்போல் தோன்றியது; கிளம்பினேன். நீயும் என்னைப் பார்க்க வந்து நிற்கிறாய்?" என்று சொன்னாள்.

"நீ எதற்காக என்னைப் பார்க்க நினைத்தாய்?" என்று கேட்டாள் தங்கம்.

"காரணமெல்லாம் எனக்குச் சொல்லத் தெரியாது. ஏதோ என் மனத்தில் அவ்வாறு தோன்றியது. உடனே புறப்பட்டேன்" என்றாள் ராதா.

"சரி, வா போகலாம்!" என்று தன் வீட்டுக்கு அழைத்தாள் தங்கம்.

"ஏன் இங்கேயே இருப்போமே!" என்று தன்வீட்டுக்கு அழைத்தாள்ராதா.

சரியென்று தங்கம் ராதா வீட்டுக்குள் நுழைந்தாள்.

இருவரும் கூடத்திலே போய் உட்கார்ந்தார்கள்.

சிறிது நேரம் அமைதி நிலவியது. யார் முதலில் பேசுவதென்று தெரியாமல் உட்கார்ந்திருந்தார்கள் போலிருக்கிறது.

கடைசியில் தங்கம் "ராதா!" என்று பேச வாயெடுத்தாள். அதே சமயம் ராதாவும் "தங்கம்" என்றுகூப்பிட்டாள்.

அடுத்தாற்போல் இருவரும் ஏக காலத்தில் ஒருவரையொருவர் "என்ன?" என்று கேட்டுக்கொண்டார்கள்.

"இன்று நம்மன ஒற்றுமை அதிகமாகத்தான் இருக்கிறது! நீ சொல்ல வந்த விஷயத்தைச் சொல்" என்றாள் தங்கம்.

"இல்லை. நீயே சொல்!" என்றாள் ராதா.

"இப்படி வம்பு பண்ணினால், ஒற்றுமை வேற்றுமையாகிவிடும். பேசாமல் நீயே சொல்!" என்று தங்கம் செல்லக் கோபத்துடன் சொன்னாள்.

ராதா பணிந்துவிட்டாள்.

"தங்கம் உண்மையாகச் சொல். உனக்குக் கொஞ்சங்கூட நடராசனைப் பிடிக்கவில்லையா?" என்று கேட்டாள் ராதா.

"ராதா, நீ உண்மையாகச் சொல். அவரை நீ கொஞ்சங்கூட வெறுக்கவில்லையா?" என்று கேட்டாள் தங்கம்.

"குறும்புக்காரியடி நீ! எப்பொழுதும் மனத்தில் உள்ளதைச் சொல்லவே மாட்டாய்!" என்று கடிந்துகொண்டாள் ராதா.

"நீதான் என்னவாம்? அப்படியே பிட்டுப் பிட்டுச் சொல்லிவிடுகிறாயாக்கும்?" என்று கேட்டாள் தங்கம்.

"எனக்கு அந்த நடராசனைக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை." என்றாள் ராதா.

தன் வாயைக் கிளறத்தான் அவள் அப்படிச் சொல்கிறாள் என்று தெரிந்துகொண்டாள் தங்கம்.

'எனக்கும் அப்படித்தான்!" என்றாள்.

"ஆனால், அந்தக் கை மட்டும் ஒழுங்காக இருந்தால்..." என்று குறும்புத்தனமாக ஆரம்பித்தாள் ராதா.

"அவ்வளவுக்கு ஏன் போகிறாய்? கை எப்படியிருந்தாலும் கட்டிக்கொள்ளத்தான் ஆளிருக்கிறதே!" என்றாள் தங்கம்.

உடனே ராதாவின் தலை தானாகக் கவிழ்ந்தது. அவள் முகம் சிவந்தது. அவளுக்குத் தங்கத்தை நிமிர்ந்து பார்க்கவே கூச்சமாயிருந்தது. அவள் நடராசனைக் காதலிக்கிறாள் என்று நிச்சயமாகத் தெரிந்துகொண்டாள் தங்கம். இதே உணர்ச்சிகளை முன்னொரு நாள் ராதா வெளிப்படுத்தியபோது, அவள் உள்ளத்தைச் சரியாகத்தெரிந்து கொள்ளாத தங்கம். இப்போது தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொண்டாள். ஆனால், நடராசன் தங்கத்தின்மேல் ஒரே உயிராக இருக்கிறான் என்ற விஷயம் அந்தப் பேதைப் பெண்கள் இரண்டு பேருக்குமே தெரியாது

சிறிது நேரம் அமைதி நிலவியது. பிறகு தங்கம் பேச ஆரம்பித்தாள்.

"ராதா, நான் காணாமற் போனதைப் பற்றி ஊரிலே என்ன பேசிக்கொள்கிறார்கள் தெரியுமா?" என்று கேட்டாள்.

"ஊர் அப்படித்தான் பேசும்! அப்படிப் பேசப்பட்டவர்கள் இருவருமே திருமணம் செய்துகொண்டுவிட்டால் அப்புறம் 'ஆகா! காதல் தம்பதிகள்!" என்று புகழ்ந்து பாராட்டும்.

"அப்படிப் பேசப்பட்டவர்களில் ஒருவருக்கும் பேசப்படாதவள் ஒருத்திக்கும் திருமணம் நடந்தால் இந்த ஊர் என்ன செய்யும்?" என்று கேட்டாள் தங்கம்.

ராதா பதில் சொல்ல வாயெடுத்தாள். ஆனால், சட்டென்று தன் உதட்டைக் கடித்துக்கொண்டு, முன்னிலும் நாணம் படர்ந்து சிவந்த முகத்தோடு, "தங்கம்! வரவர நீ பெரிய குறும்புக்காரியாய் வந்துவிட்டாய்! உன்னை அந்த ஒற்றைக் கையனுக்கே திருமணம் செய்து வைத்துத்தான் தண்டிக்க வேண்டும்." என்று கூறினாள்.

"சரி. அப்படியேதான் செய்துகொள்கிறேனே!" என்று அலட்சியமாகச் சொல்லிய தங்கம் ராதாவின் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள்.

அலட்சியமான அவள் கூற்றைக் கூடச் சரியாகப் புரிந்துகொள்ளாத ராதாவுக்கு உடனே முகத்தில் ஏமாற்றக் குறி படர்ந்தது. பேச்சுக்காகத் தங்கம் அப்படிக் கூறியிருப்பாள் என்று அவள் எண்ணிய போதிலும் கூட, அவள் அப்படிச் சும்மா சொன்னதைக்கூட அவளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவள் உணர்ச்சிகளை ஆரம்பத்திலிருந்தே கவனித்துக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்த தங்கம், "பயப்படாதே! நான் உனக்குப் போட்டியாக வந்துவிட மாட்டேன்!" என்று சொல்லிச் சமாதானப்படுத்தினாள்.

அதன் பிறகுதான் ராதாவின் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது. கொஞ்ச நஞ்சம் மிஞ்சியிருந்த வெட்கத்தையும் ஒதுக்கிவிட்டு ராதா, தங்கத்திடம் தன் இதயத்துணர்ச்சிகளை வெளிப்படுத்திப் பேச ஆரம்பித்தாள்.

அன்று, புளிய மரச் சந்திலிருந்து நடராசன் தன்னைத் தூக்கிக்கொண்டு வந்ததையும், பிறகு தான் கண் விழித்ததையும், கீழே இறங்கிப் பயந்து அவரை ஒட்டிக்கொண்டே வந்ததையும் கூறினாள். பிறகு, அவர் தன்னை விட்டுப் போனது முதல், அவள் எதையோ இழந்து தவிப்பது போல் உணர்ந்ததையும், அவருடன் தான் அந்த இருட்டில் ஒட்டி ஒட்டிக்கொண்டு வந்த செயலை எண்ணிப் பார்த்து உள்ளம் சிலிர்த்ததையும், தன் வாழ்வில் அவரே துணையாக என்றும் இருக்கக்கூடாதா என்று எண்ணி ஏங்கியதையும் விரிவாக எடுத்துக் கூறினாள். பொதுவாகவே, பெண்கள் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகிவிட்டால், தங்கள் உள்ளத்து இரகசியங்களை யெல்லாம் ஒருவர்க்கொருவர் எடுத்துச் சொல்லி விடுவார்கள். ஆனால், தங்கம் இந்த விஷயத்தில் அழுத்தக்காரி என்றுதான் சொல்ல வேண்டும். அவள் தன் அத்தான் சுந்தரேசனிடம் கொண்ட ஈடுபாட்டைப் பற்றி ராதாவிடம் சொல்லவே யில்லை. நடராசனைப் பொறுத்தவரை அவள் தன் மனக் கருத்தை ராதாவுக்கு எடுத்துச் சொல்லியிருந்தாளே தவிர, சுந்தரேசனைப் பொறுத்த விஷயம் எதுவும் சொல்லவேயில்லை.

ராதா, தன் இதயத்தை அப்படியே தங்கத்திற்கு விரித்துக் காட்டிவிட்டாள் என்றே சொல்ல வேண்டும். நடராசன் எப்படிப்பட்டவராயிருந்த போதிலும்

நாரா நாச்சியப்பன்

அவரையே கட்டிக்கொள்வதென்று தான் தீர்மானித்துவிட்டதாக அவள் உறுதியாகச் சொன்னாள்.

அவனையும் தன்னையும் சேர்த்துப் பார்த்து-அவள் கட்டியிருந்த இன்பக் கனவுகளையெல்லாம் எடுத்தெடுத்துச் சொன்னாள். முதலில் சிறிது அலட்சியமாகவே அவள் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டு வந்த தங்கம், போகப் போகக் கவனமாகக் கேட்கத் தொடங்கினாள். ராதா தன் காதலை விவரித்துச் சொல்லச் சொல்லத் தங்கத்தின் மனத்தில் வியப்பும் பிரமிப்பும் மேலோங்கின.

ஒரு பெண் ஓர் ஆடவனிடம் இதயத்தைச் செலுத்திவிட்டால் அவனைச் சாதாரண மனிதனாக மதிப்பதில்லை மனிதர்களுக்கு எல்லாம் மேலாக மிக மிக உயர்ந்தவனாக மதிக்கத் தொடங்கிவிடுகிறாள் என்ற எண்ணம் தங்கத்திற்கு ஏற்பட்டது. தான், தன் அத்தானை அவ்வளவு மேலாகக் காதலிக்கவில்லை என்ற தாழ்வுணர்ச்சி கூட அவளுக்கு உண்டாகியது. ராதா பேசப் பேச அவளுக்கே நடராசன் உயர்ந்தவனாகக் காணப்பட்டான்.

கடைசியாக ராதாவுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிய தங்கத்துக்கு, மனத்தில் ஏதோ புது விதமான உணர்ச்சி ஒன்று தோன்றியிருந்தது. ஒருவேளை அவளுக்கு ராதாவின் மேல் ஏற்பட்ட பொறாமையுணர்ச்சியாகக்கூட அது இருக்கலாமோஎன்று எண்ணும்படியாக இருந்தது. தனக்கு நடராசன் மேல் காதல் இல்லை என்று அவள் தெளிவாக உணர்ந்தாள். ஆனால், அவனை ராதா காதலிப்பதைக் கண்டு தனக்கு ஏன் பொறாமை போன்ற உணர்ச்சி தோன்ற வேண்டும் என்று அவளுக்கே புரியவில்லை; ஒரே குழப்பமாயிருந்தது!

(தொடரும்)

நிலையான ஆட்சி தேவை!

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

ஆகி முதலமைச்சராக வரமுடியும் ?'' என்று கேட்போரும் ''அம்மையாருக்குக் கல்வியறிவு பற்ருதே!'' என்று விமர்சிப்போரும் இருக்கின்றனர். அவர்கள் கேள்விகளுக்கெல்லாம் பதிலாக, அவ்வூர்த் தலைவர்கள் முறையே இராசகோபாலாச்சாரியாரையும் காமராசரையும் இலங்கை முதல் தலைமை அமைச்சரான மறைந்த ஸ்டீபன் சேனநாயக்காவையும் காட்டுகின்றனர்.

''அம்மையாருக்கு ஈராக் என்ருல் என்ன என்றுகூடத் தெரியாதே! எங்கெந்த நாடுகள் எங்கெங்கே இருக்கின்றன என்றுகூடத் தெரியாதே! அவர்கள் முதலமைச்சராக வந்து எப்படி கடமை ஆற்றுவார்கள்? சிக்கல்களை எப்படித் தீர்ப்பார்கள் ?'' என்று எம். இ. பியைச் சேர்ந்த தோழர் நிர்மல் கருணதிலக கடுமையாய்த் தாக்கியிருக்கிருர். என்ருலும் அம்மையாரை முதலமைச்சர் பதவியில் உட்கார வைத்துக்காட்டத்தான் போவதாக அவர் கட்சிப் பேச்சாளர்கள் சொல்கின்றனர். அல்லாது, அவர்கள் கட்சி பெரும்பான்மை பெற்றுவிட்டால், அத்தனகல்லாவில் வென்றுவரும் தோழர் உபயசேசராவைப் பதவி விலகும்படி செய்வதென்றும், அந்தக் காலி இடத்திற்கு நடக்கும் துணைத்தேர்தலில் அம்மையாரை நிறுத்தி வென்று ஆட்சியிலேற்றுவது என்றும், முடிவு செய்திருக்கின்றனர். இவ்வாறு அவர்கள் கட்சியின் அதிகாரப்பூர்வமான கூட்டம் ஒன்றில் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

★

கூட்டத்திற்கு மக்கள் வருவதை வைத்துக் கணித்தால், வெற்றிக் கொடி சிரீமாவோவின் பக்கத்தில்தான் உயர்கிறது என்றே சொல்லலாம். யூ. என். பியினர் கூட்டங்களுக்குத் திரளாத அளவு, இவர்களின் கூட்டங்களுக்குச் சாரி சாரியாகத் திரள்கின்றனர். கிராமங்களில் இவர்களின் கூட்டங்கள் என்ருல், கோலாகல விழாவாகத்தான் இருக்கின்றன.

இலங்கை சுதந்தரக்கட்சியினரின் தேர்தல் திட்டங்களை, டாக்டர் டி சில்வா அவர்களின் பேச்சைக் கொண்டு அறியலாம்: ''இம்மண்ணின் எதிர்காலம். இளஞ்சிருர்களின் கையில் இருக்கிறது. நாம் அவர்களின் கல்வியை மறுத்தோமானுல், அது நாமே நம்நாட்டின் எதிர்காலத்திற்குக் கல்லறையை அமைத்துக் கொள்வதாகும்.

ஒரு வகுப்பினர் மட்டும் கல்விக் கூடத்திலே மகிழ்ந்து திளைக்க, வெகு பலர் அக்கூடத்திற்குள்நுழையவும் உரிமையற்றுக் கிடக்கின்றனர். அக்கொடுமையை ஒழிக்க வேண்டுமானுல், பள்ளிகள் அனைத்தையும் அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும். ஆம்! பள்ளிகள் அனைத்தும் அரசினரால் நிருவகிக்கப்பட வேண்டும்.

எங்கள் கட்சிக்கு வாக்களித்தால், மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படும்; அந்நியத் தளைகள் அகற்றி நொறுக்கப்படும்.

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் வங்கிகளைத் தேசிய மயமாக்குவோம். இவ்வங்கிகள் முதலாளித்துவத்தின் சுரண்டற் கருவிகள். இவை நம் நாட்டு மூலதனங்களைச் சுரண்டுவதோடு, ஏழையரின் குருதியையும் உறிஞ்சுகின்றன.''

★

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களையும் பிற பகுதிகளையும் அடக்கிய தாயும் தன்னுட்சி பெற்றதாயும் உள்ள ஓர் அரசை அமைக்க எழுந்ததே இலங்கைத் தமிழரசுக் கட்சி அதன் தலைவரும் தொண்டர்களும் இதற்காகப் பட்டபாட்டை எழுத ஏடுகள் கொள்ளா. இனக் கலவரத்தின்போது, இக்கட்சியின் தொண்டர்கள் பட்டபாட்டை எழுத வொண்ணுது இவர்தம் தலைவர் பெரியார் செல்வநாயகம் ஆவார். இளைஞர்களையும் பெரியவர்களையும் ஒருசேர அழைத்துக்கொண்டு இலட்சியக் கோட்டைக்குச்செல்லும் இவர், சிங்கள அரசின்முன் நீட்டிய நான்கு கோரிக்கைகள் பிற்கால வரலாற்றிலும் இடம்பெறக் கூடியன.

பண்டார நாயக்கா இருந்த நாளில், அவர் இத்தனியாட்சி முறைக்குப் பதிலாக வேருெரு திட்டத்தைத் தந்தார். அது வட்டார ஆட்சி மன்றம் (Regional Council) எனப்படும். இதனைச் செல்வநாயகமும் ஒப்புக்கொண்டு இருவருக்கும் ஓர் ஒப்பந்தமும் ஏற்பட்டது. அது பி. சி. ஒப்பந்தம் எனப்படும். ஒப்பந்தத்திற்கு முன்வந்து முடித்த பண்டார நாயக்காவே, அதை ரத்துச் செய்துவிட்டார். அதன் தொடர்ச்சியே சிங்களவர் – தமிழர் இனக்கலவரம். இப்போது தமிழகத் தனித் தன்னுட்சி அமைப்பதற்கு நாளானுலும் வட்டார ஆட்சி மன்றத்தையாகிலும் பெறுவதில் அக்கறை காட்டுகின்றனர். அவ்வட்டார ஆட்சி மன்றம் அமைந்தால் நிலை பின்வருமாறு இருக்கும்.

''தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் அப்பெரும்பான்மையைக் குலைப்பதற்காகச் சிங்களவர் குடியேறுவதைத் தடை செய்து, தமிழரின் பெரும்பான்மை காப்பாற்றப்படும்.

இன்று சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாக்கிப்பட்டிருக்கிறது. அத்துடன் தமிழுக்கும் அவ்வுரிமை தரப்படும்.

பள்ளிக்கூட நிருவாகம் முதலிய வற்றையும் தம் பகுதிக்கான வளர்ச்சி திட்டங்களையும் வட்டார ஆட்சி மன்றமே கவனித்துக்கொள்ளும்.

தமிழகத்திலிருந்து குடியேறிச் சிங்களவர் பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கு இருந்த வாக்குரிமை ஸ்டீபன்சேனநாயக்காவால் பறிக்கப்பட்டது. குடியுரிமையும் மறுக்கப்பட்டது. இந்நிலை மாற்றப்பட்டு அவர்கட்கு, வாக்குரிமையும் குடியுரிமையும் வழங்கப்படும்.''

–இவ்வதிகாரங்களும் வேண்டுகோள்களும் பிறவும் வட்டார ஆட்சி மன்றம் நிறுவப்படுவதால்தமிழர்க்குக் கிடைக்கும் என்பது தமிழரசுக் கட்சியாரின் அழியாத நம்பிக்கை.

பண்டார நாயக்கா காலத்தில் தள்ளப்பட்டுவிட்ட இந்த வட்டார ஆட்சி மன்ற உரிமை இந்நாளிலாகிலும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் பாடுபட்டுவரும் தமிழரசுக் கட்சியினரின் உதவி, ஆட்சி பீடம் ஏறத் துடிக்கும் அத்தனை கட்சியினராலும் வேண்டப்படுகிறது. டட்லி சேன நாயகா அவர்கள்கூடத் தனது அமைச்சரவை கவிழாமல் இருப்பதற்கு, இவர்களின் உதவியைக் கோரினுர். தமது மேற்கூறிய நான்கு கோரிக்கைகளை ஒப்புக்கொள்ளாத எவருக்கும் ஆதரவளிக்கத்தமிழரசுக் கட்சியினர் மறுத்துவிட்டதால், அவ்வமைச்சரவை கவிழ்ந்து போயிற்று.

அதனுல் கலைக்கப்பட்ட பாராளும் மன்றத்தில், தமிழரசுக் கட்சியினர் பெற்றிருந்த இடங்கள் 15 என்பதையும் குறிப்பாக நினைவில் கொள்ளல் வேண்டும்.

''இன்று, இவர்களின் உதவியைப் பண்டார நாயக்கா கட்சியினர் பெற முயன்றதாகச் சொல்லப்படுகிறது. ஆனுல் அவ்வாறு இலங்கை சுதந்தரக் கட்சிக்காக, தமிழரசுக் கட்சியினரைக் கண்டு பேசியவர் யாரென்று தெரியவில்லை!''-இப்படி ஒரு செய்தி. தமிழரசுக் கட்சியினர் போட்டியிடும் இடங்களில் ஓரிடம் தவிர பிற இடங்களில் இலங்கை சுதந்தரக் கட்சியினர் போட்டியிடாததைக் கொண்டு, இவ்வையம் உறுதிப்படுகிறது. இவ்வையம் யூ. என். பி.யினர் தேர்தல் பிரசாரத்திற்கு ஒரு வழியில் உதவுகிறது.

மட்டக்களப்பு இராசதுரை ஒரு தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் இக்கருத்தைத் தெரிவித்திருக்கின்ருர்: ''சிரீமாவோவின் கட்சியோடு தமிழரசுக் கட்சி ஒப்பந்தம் செய்திருப்பதாக யூ. என். பியினர் சொல்கின்றனர். நமக்குச் சிங்கள ஆட்சி வெறியர் அனைவரும் ஒரு தரத்தினரே! **தமிழர்களின் கோரிக்கைகளை ஏற்காத எந்தச் சிங்களக் கட்சியும் நமக்கு ஒரு நிலையே! யூ. என். பி பசும்புல் தரையில் மறைந்திருக்கும் பாம்பென்ருல், இலங்கை சுதந்திரக் கட்சி அங்கே வெறி கொண்டலையும் சிறுத்தை! இரண்டில் எதை நல்லதென்று சொல்லுவது?''**

கடந்த தேர்தலில் தமிழரசுக் கட்சியினர் 19 பேர் போட்டியிட்டனர்; இப்போது ஆதரவாளர்கள் உள்பட 25 பேர் போட்டியிடுகின்றனர். எந்தக் கட்சி ஆட்சியமைக்க விழைந்தாலும், இந்தக்கட்சியின் துணை கட்டாயம் வேண்டும்!

தமிழரசுத்தலைவர் செல்வநாயகம் அவர்கள் சிறுபான்மையாய்ச் சிதறிக் கிடக்கும் தமிழர்களுக்கு வாக்குரிமை அளிக்கக் கோரியதோடு மற்ருென்றையும் குறிப்பிட்டார்கள். இலங்கைத் தோட்டத் தொழிலாளரிடையும் புறக்கோட்டைப் பகுதிகளில் உள்ள தமிழர்களிடையும் செல்வாக்குள்ளவர்கள், தோழர்கள் அப்துல் அசீசும் தொண்டமானும் ஆவர். அவர்களது ஆதரவாளர்கள் சிதறிக் கிடப்பதால் தேர்தலில் அவர்கள் வெல்லமுடியாது போகிறது. எனவே அவர்களது குரல் பாராளும் மன்றத்தில் ஒலிக்க, நியமன உறுப்பினர் அறுவருள் இலங்கை இந்தியர் காங்கிரசின் பிரதிநிதிகள் இருவர் இருக்க வேண்டுமென்பது செல்வநாயகத்தின் கோரிக்கைகளுள் ஒன்ருகும்.

தம் கட்சிக்கு ஆதரவு சேர்க்க யூ. என். பீயினர், இலங்கை சுதந்தரக்கட்சியினர் தமிழரசுக் கட்சியினருடன் மறைவாக ஒப்பந்தம் செய்துகொண்டதாகச் சொல்லிவருவதை, இலங்கை சுதந்தரக்கட்சித் தோழர் டிசில்வா (கூட்டுச் செயலாளர்) பின்வருமாறு மறுத்தார்: ''உண்மையில் டட்லி சேனநாயக்காதான் மறைவான உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிருர், நாயக்காவின் வீடான 'உட்லண்ட்'சுக்கு செல்வநாயகத்தை அழைத்துப் பேசினுரன்ருே? இதிலிருந்து நாம் முடிவு செய்துகொள்ளலாம், யார் மறைவாக உடன்படிக்கை செய்து கொண்டிருக்கின்றனர் என்பதை?''

★

இலங்கை சமசமாசக் கட்சியின் தலைவர்கள் சிலர் சில நாட்களுக்கு முன், கொழும்பில் உள்ள உருசிய அரசாங்கத் தூதர் இல்லத்திற்குச் சென்று விருந்து உண்டனர். அது இலங்கையில் மிகுந்த பரபரப்பை உண்டாக்கியுள்ளது. ''சமசமாசக் கட்சியினரும் பொதுவுடைமைக்கட்சியினரும் கூடி, பொதுவுடைமை நாடுகளின் உதவி பெற்று இலங்கையில் சர்வாதிகார ஆட்சியை நிறுவப் பார்க்கின்றனர். இலங்கைப் பொது மக்களின் எதிர்காலம் சர்வாதிகாரத்தின் காலடியில் சிக்குவதா?'' என்ற வினவை எழுப்பியிருக்கின்றனர் யூ. என். பியினர். சம்பந்தப்பட்ட கட்சி இரண்டும், ''அந்த விருந்து சாதாரண ஒரு விருந்துதான்; ஏதும் சதியாலோசனை நடைபெறவே இல்லை! இலங்கையை மாற்ருன் தாளில் அடகு வைத்திடோம்!'' என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்றன.

யூ. என். பியினர் இதைக்குறித்துச் செய்த பிரசாரத்தால், கொழும்புச் சுவரெங்கும் உருசிய எதிர்ப்பு வாக்கியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. உருசியத் தூதர் அலுவலகத்தில் சிங்களக் காவல் துறையினர் காவல் காக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இதனுல் தோழர் என். எம். பெரயராவின்சமசமாசக் கட்சி இப்போது நெருக்கடியில் தள்ளப்பட்டுவிட்டது!

இலங்கை அரசியலில் குறிப்பிட வேண்டிய மற்ருெரு கோமாளி இலங்கை சுதந்தரக்கட்சியில்இருந்த [illegible]கார். இக்கோமாளிக்கு அரசியலும் தெரிய[illegible]; தடியாட்சி முறையும் புரியாது. அது,நாம்-தமிழர் இயக்கத்துக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் உள்ள வேறுபாடுகளை உணராது, அண்மையில் ஓலமிட்டதும் நினைவிருக்கலாம். தோழர் மரிக்கார் முன்னுள் அஞ்சல் துறை அமைச்சர். அவர் தன் பதவிக் காலத்தில் கையூட்டுப் பெற்ருர் என்று இப்போது விசாரணை ஆய்வு நடைபெற்று வருகிறது. அதனுல் இவரது சொந்தக் கட்சியினரே இவருக்கு ''டிக்கட்'' தராது ஒதுக்கிவிட்டனர். அந்த ஆத்திரத்தில்தான் கண்டவர்களையெல்லாம் திட்டித் திரிகிறது. இக்கோமாளி தரும் தொல்லைகள் கொஞ்சமில்லை.

இலங்கையை யூ. என். பியினர் ஒன்பது ஆண்டுகள் ஆண்டிருக்கின்றனர். பண்டார நாயக்காவின் கட்சி மூன்று ஆண்டுகள் ஆண்டிருக்கின்றது. இவர்களால் சிங்களவருக்குப் பயன்கள் ஏற்பட்ட அளவு, தமிழருக்கோ தமிழுக்கோ ஏற்படவில்லை. அதற்கு மாருகத் தொல்லையும் கவலையுமே அளித்தன. வடக்கு, கிழக்கு - இவ்விரு மாகாணங்களில்தான் தமிழர்கள் அதிகமாக வாழ்கின்றனர். இவர்கள் கட்சி தமிழரசுக் கட்சி. இக்கட்சியின் கோரிக்கைகளை எந்தச் சிங்களக் கட்சி ஏற்கிறதோ, அதுதான் தமிழர் ஆதரவைப் பெறும். அக்கட்சியே நிலையான அமைச்சரவையையும் நிறுவமுடியும். எந்தக் கட்சி தமிழர் கோரிக்கையை ஏற்று, நியாய புத்தியுடன் நடக்கப் போகிறது என்பது தெளிவாகும் நாள் தொலைவிலில்லை.

★

மா.பாண்டியன்

சந்திரோற்சவம்

மலையாளச் சிறு காவியம்

கேரளத்துச் சிங்காரிகளின் உல்லாசக் கீர்த்திகளைக் கிண்டல் செய்யும் மாகாவியம் 'சந்திரோற்சவம்' அக்காவியத்தைப் பற்றிச் சுவையான விவரங்களைத் தொகுத்துக் கொடுக்கிறார் கட்டுரையாளர்,

இது ஒரு சிருங்கார காவியம். ஆடல்வல்ல அழகியர் 'திருவுலா' வந்த சேதி, சிரிக்க சிரிக்க இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. நம்பூதிரிகளின் பரிமளக்கொழுப்பிற்கு 'நிலாச் சோறு' படைத்த பொன்னவிர் மேனியர், இந்த மதன விளையாட்டுகளை வைத்துக்கொண்டு மதுர கவிகளை அள்ளி வழங்கிய அந்தப்புரக் கவிஞர்கள், சுவைத்துக் களித்து உல்லாசத்தைக் கண்ட ஊராள்வோர், இவர்கள் இந்தக் காவியத்தில் விசித்திரமாகவும் வேடிக்கையாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறார்கள்!

கேலியையும் கிண்டலையும் சரங்களாகத் தொடுத்து இனிய மலையாளத்து மணிப்பிரவாள நடையில் ஊர்ப்பேர் தெரியாத கவிஞன் ஒருவன் இதனைப் படைத்திருக்கிறான்!

தென்னக வரலாற்றில் பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து சமுதாய வாழ்வில குறிப்பிடத்தக்க மாறுதல் நிழலிடுகிறது. இந்த வெளிச்சத்திலே ஒரு அலங்கோல சமுதாயமும், அதன் பிரதிபலிப்பான இலக்கியமும் படலங்களாகத் தெரிகின்றன. அந்த நாட்களை என்னதான் 'பொற்காலம்' என்று சில சரித்திரக் குருடர்கள் கதைத்தாலும், எளியவன் அன்று திரும்பத் திரும்பத் துவைத்து தேய்க்கப்பட்டான்! உயர்குடியினருக்கு வாளும் கேடயமும் மட்டுமல்ல; தெய்வ பிம்பங்களும் துணைநின்றன.

திருக்கோயில்களின் பொட்டுக் கட்டிய சிருங்கார வல்லியர்கள் தரும் பால் குடித்து வளர்ந்த பிரபுக்களுக்கும், பிரசாதம் வழங்கும் புரோகிதர்களுக்கும், அமுதும் தேனும் வார்த்திருந்த அந்த நாளில்தான் பரசுராமர் பெயரில் புதிய சித்தாந்தம் புனையப்பட்டு, கேரளத்துச் சமுதாயத்திலே திணிக்கப்பட்டது.

"தெய்வமைந்தர்களான நம்பூதிரிகளின் விருப்பத்திற்குப் பிற குலப் பெண்கள் இசைவதில் பழுதில்லை: அது பாபம் தீர்க்கும் பவித்திரமான திருப்பணி..." என்று பரசுராம வாக்குக்கு விளக்கம் தரப்பட்டது!

அப்போது வாழ்ந்த ஒரு குறுநிலத்துக் கோமகன்தி, இதற்கு ஏற்றாற் போல, "பெண்களின் பிறவிப்பயனே இதுதான்!" என்று சாசனம் எழுதுவித்தான்.

வெறிபிடித்த மேன்மக்களின் வேட்கையைத் தணித்துக்கொள்ள, இப்படிப் புதுப்புது வழிகள் திறந்தன. சிற்றரசரும், அவர்தம் எண்ணமற்ற தேவியரும் இன்னும் பல எழிலரசியரும் இவர்களைச் சுற்றச்சூழ நின்ற அறங்கூறுவோர், அமைச்சர்கள், தளபதிகள் போன்றோர் மட்டுமே சமுதாயத்தில் கற்றறிந்தோர்களாகக் காட்சியளித்தனர்.

ஏழைக் கவிஞன் என்ன செய்வான்? தரம் கெட்ட நிலைக்கு அவன் தாழ்த்தப்பட்டான். படித்தோரல்லவோ, அவன் கவிதைகளைப் பாராட்டிட வேண்டும்? அவர்களோ பாவிகள்...காமச் சுவை தவிர, பிற சுவை அறியா கருத்தினர். கொடிபாடி, தேர் பாடி, கோமான் புகழ் பாடிய கவிஞன், கலை பாடி, விழி பாடி, அமுத நிலை பாடி, அந்தப்புரச் சடங்குகளைக் காவியமாக்கித் தன் வயிற்றை நிரப்பிக்கொண்டான்!

சித்திரச் சுகம் தரும் இந்த நிலவுகளைக் கதைத் தலைவிகளாகக் கொண்டு, மணிப்பிரவாள நடையில் பல ஏடுகள் அற்புதமாக எழுதப்பட்டன.

மல்லி நிலா, உண்ணியாடி சரிதம், மாரலேகா மலர் பாண கேளி, கோக சந்தேசம், செரியச்சி, உத்திர சந்திரிக சரிதம், உண்ணி நீலி சந்தேசம்,...இப்படித் தொடர்ந்தன, பிரபுக்களின் சுகானுபவமும், பாடல் புனைவோரின் இலக்கியப் பணியும்!

அப்போதைய நிலையில் மற்ற மொழிகளிலும் இத்தகு முயற்சிகள், விதவிதமான வண்ணங்களில் எழுந்தன.

'சந்திரோற்சவம்' இந்த குவியல் காவியங்களிலிருந்து பிரிந்து, தனித்த பண்போடு மிளிர்கிறது. மற்ற புலவர்கள் அழகிகளை, சிருங்கார ரச நிலவினரைத் துதித்து, அந்த மயக்கத்திலே எழுத்துக்களை வடித்திருக்க, 'சந்திரோற்சவம்' எழுதியவன் உல்லாச உலகினரை இகழ்ந்து கேலி செய்யும் பாணியிலே தன் காவியத்தைப் படைத்திருக்கிறான்!

சிலப்பதிகாரத்திலே வரும் "இந்திர விழா" போல் தான், சந்திர விழாவும்! முறையிலும் பண்பிலும்தான் வேறுபாடு.

உயிரிழைத்தாற் போன்ற தேவாலயக் காம மங்கையரும், அவர் தம் அழகில் கனிந்து கருத்தழிந்த பெருமான்களும் கொண்டாடும் கோலாகல விழாவின் விருத்தாந்தங்கள் காவியத்தின் இறுதியிலே வருகின்றன.

மேதினி வெண்ணிலா எனும் தாசி மகள் அவதரிப்பதோடு காவியம் துவங்குகிறது.

அவள் பிறந்ததும் வானத்திலே பெருமுழக்கம் திவ்யக் குரலாக எதிரொலித்து வாழ்த்தியது! 'ஆர்த்தது வசந்தம்-அலர் மாது கண் குளிர்ந்தாள்' என்று தனித் தமிழை மலையாள எழுத்துக்களில் குறிப்பிடுகிறான் கவிஞன். இதுமட்டுமா, வானோர் வாழ்த்துக் கீதங்களோடு வந்தார்களாம்!

பாலொத்த புகழ்பரப்பி, வேலொத்த அந்த விழியழகி-மேதினி வெண்ணிலா-அங்கம் தங்கமாக, அழகெலாம் உருவாக, எங்கும் எழிலை எடுத்துச் சொல்வோர் பலர் சூழ, அமுத நிலவுபோல் அரும்பவிழ்ந்த மொட்டுபோல் வளர்கிறாள்!

பிறகு என்ன? பொன்னும் மணியும் கொட்டிக் கொடுப்போர் குலவ, புலமை சான்றோர் துதி பாட, தோழியர் புடை சூழ, அந்த பேரழகின் செல்வம் தடித்த மேனியினருக்கு தன்னையே பரிசளித்து கணிகையர் குல சம்பிரதாயத்திற்கு வாழ்வளிக்கிறாள்!

தேவரடியார் திருவிளக்குகளான, மானவீ மேனகா, மாரசேமந்திகா, கனகாவலி உண்ணிநீலி, பாறைக் காட்டு இட்டி, தேன் மாதவி, புஷ்பலதா, கேளிலதா, காமியவலி போன்றோர் சீமங்கலம் அரண்மனை மந்திர சாலையில் கூடி, சந்திரோற்சவத்திற்கான செயல் முறைகளை வகுக்கிறார்கள்.

மேதினி வெண்ணிலாவின் தலைமைச் சொற்பொழிவுக்குப்பின் முன்னாள் அழகிகளான உண்ணிநீலி, கண்டி குழலி இருவரும் கேரளத்தில் அழிந்து வரும் பரத்தையர் தொழிலை மீண்டும் உயிர்ப்பிப்பது பெண்களின் கடமை என்பதை விளக்குகிறார்கள்.

பள்ளியறை நித்திரையிலிருந்து பரத்தையர் குல மகிமைவரை பல பல சேதிகள் அந்தக் குழுவில் பேசப்படுகின்றன.

கவிஞன் இதை, குறிப்பிடும்போது சரச விலாச மோகினியரின் காமன் விழா நிகழ்ச்சி மூவுலகிற்கும் எட்டியதாக சித்தரிக்கிறான்!

கண்டன் கோதை எனும் குறுநில மன்னனின் புகழ் பல்லாண்டோடு நூலின் நான்காம் பகுதி விரிகிறது. இவன் தேவதாசியரின் பாதுகாவலன்-எனவே விழாவிற்கு முன்னரே வருகை தந்து சிறப்பிக்கிறான். பின்னர் பதினெட்டுக் குழுக்களாகப் பிரிந்து தாசியரும் அவர் தம் அடியார்களும் வருகிறார்கள்.

ஓடநாடு, கண்டியூர், திருவல்லம்; பாலியூர் போன்ற நாட்டுப் பகுதிகளின் ஊர்வசி குல வஞ்சியர்கள்-இவர்கள் இரண்டாம் தரத்தினர், சீமான்கள் சூழ பவனி வருகிறார்கள். அடுத்ததாகக் கொடுங்கல்லூர் ஆனந்தநீலி, நந்திபுரத்து இட்டி, வீணாவதி, உண்ணிச் சிறுதேவி போன்ற கடைத் தரத்தினரான சாமான்ய வேசிகள் வருகிறார்கள்.

இந்த இட்டியுமை என்பாள் வரலாற்றுப் 'புகழ்' பெற்றவள். மணக்குளத்து ஸ்ரீகண்ட மன்னனின் ஆசை நாயகி இவள் ஒரு நாள் மன்னன் இவளோடு இரட்டை நித்திரையிலிருந்தபோது, வான சஞ்சாரிகளான சில கந்தவர்கள் அந்தக் காட்சியைக் கண்டு திருநீல கண்டக் கடவுளே உமையாளோடு சயனித்திருக்கிறார் என்று தவறாக நினைத்து தொழுது பணிந்தார்கள்! இதனைப்பார்த்த மன்னன் ஸ்ரீகண்டன் பெருஞ்சிரிப்பு சிரித்துப் பரிகசிக்கக் கந்தர்வர்கள் மன்னனை சபித்துச் சென்ற கதையை பிறிதொருகாவியம் சொல்கிறது...

மேகத்திலே படலங்கள் எழுகின்றன. ஒரே ஒலிப்பிரளயம்... குபேரர்கள் வலம்சூழ, கொடிபிடிப்போர் புகழ்பாட, புலவர்களின் பாடல் பெற்ற பிரசித்த பெருமாட்டிகள் வருகிறார்கள். தொலைவில் தங்கநிறச் சிவிகைகள் வர, வெண்சாமரங்கள் அசைகின்றன.

மாரலேகா மங்கை வந்தாள்: வேணாட்டு மயில்கள் வந்தார்கள்; மதனரதிநங்கை வந்தாள். இளவேனில் சித்திராங்கிகள் எல்லோரும் வந்தார்கள்.

இன்னும் என்ன? சந்திரோற்சவம் தானே?

காவியத்தின் ஐந்தாம் பகுதியில் எளியோரின் காதலிகள் சிவிகையில் வர உரிமையற்றோராதலினால், இளமூடர் தம் தோள்களிலே அமர்ந்து பவனிவருகிறார்கள். அங்கும் கவிஞர் குழாம் தொடர்கிறது.

இந்த இறுதிப் பகுதியில் சிருங்காரப் புலவர்களை மட்டுமல்ல, பார்ப்பனர்களையும் சிரிப்பாய் சிரிக்க வைத்திருக்கிறார், எழுதியவர்.

தேவதாசியரின் பவனி அற்புதமாக முடிகிறது. சந்திரோற்சவம் சாமான்யமல்ல. மேனகை, அரம்பை, ஊர்வசி போன்ற தேவலோகப் பெதுமகளிர் இந்த விழா நடத்தித்தான் வானோர் காதலையும், வற்றாத இளமையையும் பெற்றார்களாம். இந்த உற்சவத்தை நடத்திய மேதினி வெண்ணிலாவின் எழிலிலே எல்லோரும் மகிழ்ந்திருந்தார்கள்!

இளமயில் போன்ற அவள் சாயலும் அஞ்சனம் தோய்ந்த இருவிழிகளும், மழை முகில்நிகர் குழலும், மரகத வாய்மொழிச் சிரிப்பும்பார்ப்போருக்கு வித விதமான கனவுகளை எழுப்பின.

"அன்னமோ? வானகத்து அரம்பையோ? சொன்னமோ? மதன ரதித் தோற்றமோ? சிலைக்காமன் சின்னமோ? மடமாதர் தீபமோ?' எனத் திகழ்ந்தாள் மேதினி வெண்ணிலா!

இரவும் வந்தது. அவளது இளமை தழுவிய மதர்த்த வாளிப்புப்போல நிலவின் சீதளம் தண்ணொளி பரப்ப சந்திரதேவன்-நிலாத்தெய்வம்காட்சியளித்தது!

பழுதற்ற இந்தத் திருப்பணியால் வேசியர் உலகை உய்வித்ததால், தேவன் திகட்டாத எழில் படைத்த மேதினி வெண்ணிலாவை தன்நெடு சொர்க்கத்திற்கு வரும்படி அழைக்கிறான்!

பூவுலக வாசியர்களான பாப மனிதர்கள் அவள் அழகை சுவைக்கத் திராணியற்றவர்கள்...சொர்க்கத்துத் தேவமைந்தர்கள் அந்தப் பேரழகின் அமுதந்தைப் பெறத் துடிக்கிறார்கள் என்ற சேதி, சீமான்களுக்கும் கவிஞர்களுக்கும் குறுநில மன்னர்களுக்கும் எத்துணை பெரும் இடியாயிருந்திருக்கும்!

காவியம் இதோடு முடிகிறது.

ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர், அந்நாளைய சமுதாய நடப்புகளை கேலி செய்து, தெய்வங்களையும், நம்பூதிரிப் பார்ப்பனர்களையும் சந்தியில் நிறுத்தி நகைச்சுவையோடு. ஓர் ஏடு எழுத, அதிலும் கற்றோர் புகழும் காவிய மேன்மையை அதில் இழைத்திடத் துணிவும் திறனும் பெரும் அளவில் வேண்டும்.

சமுதாய விமர்சனம் மட்டுமில்லை; கவிதைகளின் நல்ல தமிழ் சொற்கள் அன்னாளில் மாறி வந்த மொழி இயல்பை நமக்குத் தெளிவாக்குகின்றன.

இருள் படிந்த ஒரு சரித்திர காலத்தில் ஒளி தூவ இத்தகு ஏடுகள் பெரிதும் உதவுகின்றன.

அற வாழ்விற்கு 'சந்திரோற்சவம்' போன்ற நூல்கள் தேவையில்லாமலிருக்கலாம்.

தர்ம சித்தாந்தத்திற்கும் இந்தக் காவியம் சிறிதளவும் துணை போகவில்லை.

ஒழுக்கம், கற்பு பண்பாடு இவைகளை அதிகமாகப் பேசும் உலகிற்கு இந்த ஏடு எந்த விதச் சேதியையும் தரவில்லை.

போலிச் சித்தாந்தங்களையும், மாயாவாதங்களையும் தூவி நூற்கள் பல எழுதப்பட்ட நாளில், இதுபோன்ற புது வழி ஏடுகள் எழுதப்படுவது இலக்கிய வரலாற்றில் சுவையான திருப்பங்களைக் காட்டுகின்றன.

மொழி நூல் வல்லோருக்கும் 'இலக்கியம்' என்ற அளவில்மட்டுமே சுவைப்போருக்கும் 'சந்திரோற்சவம்' பழுதற்ற காவியச் சிற்பம். காலம் இதன் தலையாய தேவையை அழிப்பதற்கில்லை.

இரா. இளஞ்சேரன்

— 4-ப் பக்கத் தொடர்ச்சி —

கொள்கிறபோது சர்க்கார் ஊழியர் பாராட்டுதலைப் பெற்றுக்கொள்ள விரும்பியதுதானும்! அதற்கேற்பவே சர்க்கார் ஊழியர் சங்கத்தவரும் முன்னைய ஆண்டுகளில் செய்தது போல இல்லாமல் எதிர்க் கட்சித் தலைவர்கள் எவரும் அழைக்கப்படாமலே தங்களின் மாநாட்டினைக் கூட்டியிருந்தனர். அடிப்படைச் சம்பளம் உயர்த்தப்பட்டதென்றாலும், உடனடிப் பலன் எல்லோருக்கும் இப்போதில்லை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதென்றாலும் ஏமாற்றத்துக்குரியதாகும்! அலுவலக நேரத்தைக் குறைப்பதற்குப் பதிலாக அதிகப்படுத்தியிருக்கிறார்கள்! ஆண்டு தோறும் அனுமதிக்கப்படும் விடுமுறைகள் குறைந்துவிட்டன! இப்போதுள்ள நிலையில் புதிய ஊதிய அறிக்கையினை ஏற்றுக்கொண்டு ஐந்தாண்டுகளுக்காவது 'சும்மா' இருக்க வேண்டும் என்று யாரோ ஒரு மந்திரி பேசியதாக நினைவு—அவ்விதமானால் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சர்க்கார் ஊழியர்கள் தங்கள் முயற்சிகளில் சில பல குறைகளையும் நீக்கிக்கொள்ளலாம்!

திராவிட முன்னேற்றக் கழகம் சென்னை மாநிலத்திலேயுள்ள அரசினர் ஊழியர்களுக்குக் கிடைத்துள்ள புதிய விகிதங்களுக்குப் பாராட்டுக் கூற நினைக்கின்ற நேரத்தில் மத்திய அரசுவின் ஊழியர்கள் தங்களின் உரிமைக் குரலைக் காட்டியுள்ளனர். சென்ற கிழமை துணைக்கண்டத்தின் முக்கிய நகரங்களில் எல்லாம் கண்டன ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடத்திக் காட்டினர் மதுரை நகரில் பெரு மழையிலும் ஆடவரும் பெண்டிருமான ஆயிரத்தை எட்டிப் பிடிக்கும் எண்ணிக்கையினர் ஊர்வலம் வந்து தங்களின் தேவையினைக் கூறினர். குடைகளையெல்லாம் உயரத் தூக்கிப் பிடித்தபோது அவைகள் எல்லாம் கருப்புக் கொடிகளாகவே காட்சியளித்தன. பம்பாய் நகரத்திலே கூட இப்படியொரு புகைப்படக் காட்சியினை உருவாக்கியுள்ளனர். சூலைத் திங்கள் 11-ம் நாள் நள்ளிரவிலிருந்து வேலை நிறுத்தம் செய்வதென்ற மத்திய அரசு ஊழியரின் முடிவினை, சர்க்கார் பல நிலைமைகளில் பல நேரங்களில் பல வகைகளில் முயற்சி செய்தும் மாற்றியமைக்க முடியவில்லை ஊழியர்களின் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்குக் கூட பாரதத்தின் முதல்வர் எனப்படும் பண்டிதர், அகில உலகத்தின் சமாதானத் தூதுவர் எனச் சரியாகவோ தவருகவோ கணக்கிடப்படும் நேரு அவர்கள் மறுத்துவிட்டாராம்! சில ஆண்டுகட்கு முன்னுல்சென்னையிலேயிருந்து சென்ற என்சிஜீ குழுவினரையும் சந்திக்க மறுத்துவிட்டது போலவே இப்போதும் நேரு செய்திருப்பது கண்டிக்கத் தக்கதாகும். 22 இலட்சம் பேர்களின் வாழ்வுப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க முன்வராத ஒரு முதலமைச்சர் உலகத்தின் பல கோடிப் பேர்களின் வாழ்விலும் தாழ்விலும் பங்கேற்கிருர் என்பது பகட்டுப் பேச்சாகவும் பழங் கதையாகவும் முடிந்து போகுமே என்பதனை அவர் போன்ருர் அறியாதது வருந்தத் தக்கதாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்திய முதலமைச்சரின் இந்த அலட்சிய மனப்பான்மையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை துணைக்கண்டமெங்குமுள்ள ஊழியர்களின் எழுச்சியை அடக்க நினைப்பது இன்றும், இனி என்றும் பலன் தராது! அவசரச் சட்டங்களினுல் உரிமையினை உடைக்க முனைவதும் அறமாகாது! 22 இலட்சம் பேர்கள்—பொறுப்பான அலுவலிலே இருப்பவர்கள், கடமையினைச் செய்து கண்ணியம் பெற்றுக்கொண்டுள்ளவர்கள், தங்களின் கட்டுப்பாட்டினை எப்போதும் விட்டுவிட விரும்பாதவர்கள்-இவர்களைத்தான் தண்டிக்க வேண்டுமென்று சர்க்கார் விரும்புகிறது! ஊழியர்களின் தேவைகளைத் தந்து அவர்களின் இதயத்து மொழிகளைப் பரிசாகப் பெற வேண்டியவர்கள் பட்டாளத்தைத் துணைக்கு வைத்துக்கொண்டு பழிவாங்குவேன் என்று பயங் காட்டுவது பாரதத்தின் பெருமைக்கு அழகல்ல! 'இந்திய சர்க்காரின் இழி செயல்களுக்குத் துணையாக கருங்காலிகளைத் தயார் செய்து கொடுக்க வேண்டுமென்று காங்கிரசுக் கமிட்டிகளைக் கேட்டுக் கேட்டுக்கொண்ட சாதிக் அலியை மத்திய சர்க்கார் ஊழியர்கள் என்றும் மறந்துவிடக் கூடாது. பொது நலத் தொண்டர்களைப் பழிவாங்கத் துடித்த காங்கிரசுக் கட்சியினரும் அவர்தம் காசுக்கு விலையானேரும் வருங் காலத்தில் மக்கள் மன்றத்திலே மன்னிப்புக் கேட்க வேண்டியவர்களாக இருக்கிருர்கள் இனி எதிர்காலத்திலாவது நேருவின் சர்க்கார் நந்தாக்களை மட்டும் நம்பியிராமல் நல்ல பாதையில் நடைபோட வேண்டும்.

—கூடலரசன்

முல்லை

புது வடிவில்
புத்தக உருவில்

ஆசிரியர்
கண்ணதாசன்

விலை 25 காசுகள்

1960 ஆகஸ்டு முதல் அழகாக வரும்.

புத்தம் புதிய பகுதிகள் !
அத்தனையும் மிகத்
தித்திக்கும் சுவைக்கனிகள் !!

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களுக்கு
விற்பனையாளர்கள் தேவை.
விவரத்திற்கு எழுதுங்கள் :

பொறுப்பாளர், முல்லை, சென்னை—6.

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, **சென்னை-1.**

சிந்தித்துப் பதில் சொல்வீர் !

அஞ்ஞானத்தின் அந்தகாரச் சுழலில் சிக்கிச் சீரழிந்த அக்கால மனிதர் கையாண்ட சிகிச்சைமுறை பிணியாளரைப் பீதி கொள்ளச் செய்தது.

விஞ்ஞானச் சுடர் ஒளியில் தெளிவு பெற்ற இக்காலச் சிகிச்சைமுறை பிணியின் பிடியைப் பக்குவமாகத் தளர்த்துகிறது.

இதுபோன்று மருத்துவத் துறையில் மட்டும் அல்ல, மற்றும் மார்க்கத் துறையிலே, சமுதாயத் துறையிலே. அரசியல் துறையிலே, ஆக ஒவ்வொரு துறையிலேயும் மனிதன் படிப்படியாக முன்னேறிக் கொண்டே வருகிருன்.

இந்த முன்னேற்றத்திற்கு ஆதாரமாக நிற்பது அவன் ஏற்படுத்திக்கொண்ட **மொழியும்**, அதனுல் அவன் பெறும் **கல்வி** யறிவுமே யல்லவா?

தமிழ் எழுதப் படிக்க தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர கடைசி தேதி: 9-8-60 | பயிற்சிகள் ஆரம்பம்: 11-8-60

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்கு வரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும். சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு :— (1) சேர விருப்பமுடையவர் கல்வி நிலையத்திலிருந்து அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். (2) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (3) ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப் படுவதால், ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம். (4) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பயிற்சி யளிக்கப்படும். (5) இத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விளக்கங்களையும் 8 நயா பைசா தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

'வாய்வு சூரணம்'

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண வாய்வு, இடுப்பு பிடிப்பு, அஜீரணம், பசியின்மை, வயிற்று வலி, இவைகளை அறவே நீக்கக்கூடியது.

5 பலம் டின் ரூ. 3-50.

சம்பு இண்டஸ்ட்ரீஸ்.
சேலம்-2. (S. Ry.)

இலங்கையில் கிடைக்குமிடம் :
ஆத்மஜோதி நிலையம்.
நாவலப்பிட்டி (Ceylon).

பேசாமடந்தை

எதிர்வீட்டில் புதிதாகக் குடும்பம் ஒன்று
எங்கிருந்தோ வந்துஇரு மாதம் ஆகும்!
புதிர்காட்டும் புதுவிழியாள்; இளமை கொஞ்சும்
பொலிவுடையாள்; பேரழகி ஒருத்தி ஆங்கே
சதிர்கூட்டும் பாதத்தில் விரைவைக் கூட்டி
தளிர்க்கரத்தின் வளையசைவில் இசையைக் கொட்டி
கதிர்கூட்டும் குழற்கற்றை தலையிற் பூட்டி
கவினுருவாய் நின்றிடுவாள் நாளும் பார்ப்பேன்!

மான்போலும் துள்ளிடுவாள் மகிழ்வாய் நின்று
மையல்தரும் விதத்தினிலே பார்ப்பாள்; மெய்யாய்
'நாம்துறவி' என்பாரும் நெஞ்சை அங்கே
நெகிழவிட்டுப் பார்த்திடுவார்; அவளின் பாங்கு!
மீன்ஒன்று மெதுவாக விண்ணி ருந்தே
விளையாட வந்ததுவோ என்றே தோன்றும்!
பொன்போலும் வண்ணத்தாள் பார்வைத் தேறல்
போதையதைத் தினம்தருவாள் சொக்கிப் போவேன்!

புன்னகையை வீசிடவா; அதனால் நெஞ்சில்
பூரிப்பைத் தந்திடவா என்றே கேட்கும்
கண்மொழியாள்; கனிவுடையாள்; அழகால் நாளும்
களிசேர்க்கும் திறமுடையாள்; தனது வீட்டில்
அன்னையொடு சிறுநங்கை தினமும் பேசும்
அழகுமொழி மழலைச்சொல் கேட்பாள்; பின்னர்
தன்னையொரு முறைபார்த்துக் கொள்வாள்; அஃது
தமிழ்விருந்து என்றேதான் நினைப்பாள் போலும்!

நண்பருடன் என்வீட்டில் தமிழைப் பற்றி
நலமாக உரையாடல் நாளும் உண்டு
பெண்மைதனை, பேரழகை தாய்க்கூட் டத்தை
பெருமிதமாய் நான்ஒருநாள் புகழும் போதில்
பெண்மயிலாள் மறைவிருந்தே பார்த்தாள்; நெஞ்சில்
பெருந்துன்பம் கொண்டாள்போல் நின்றாள், பாவம்!
நுண்மைநிறை பேச்சதனை அறியா தந்தோ
நுவலவொணா ஏக்கமவள் முகத்தில் தோன்றும்!

சிற்றாறு நெளிந்தோடி இன்பம் தந்தே
திருநாட்டில் வளஞ்சேர்க்கும் பண்பைக் கண்டு
வற்றாத மகிழ்வுதனில் திளைக்கும் போது
வஞ்சியவள் சதங்கையொலி கேட்கும்; பார்ப்பேன்!
ஆற்றுக்கே நீர்அள்ள வருவாள்; ஆங்கே
அற்புதமாய்ப் பெண்டிரெலாம் பேசக் கேட்பாள்!
மாற்றவொணா ஏக்கமவள் தலையைச் சாய்க்கும்;
மகளிர்க்கே நாணமொரு அணிதான் அன்றோ!

பலநாட்கள் பறந்தழிந்து போகும்; அந்தப்
பைங்கிளியும் நானுந்தான் மௌனப் பேச்சில்
கலந்திட்டோம்; கண்டோரும் வியப்பே கொள்ளக்
களித்திட்டோம்; மணம்செய்யும் முடிவே கொண்டோம்!
உலகமுறை தனக்கடிமை தாமே நாங்கள்!
ஒருவர்க்கே மற்றொருவர் வேண்டும் என்னும்
நலமான தத்துவத்தால் பெற்றோர் தம்மை
நாடிட்டேன் மணம்பேசச் சொன்னேன்; உண்மை!

தாய்தந்தை தம்மோடு மறுநாள் நானும்
தக்கமுறை தனிலன்னாள் வீடு சென்றேன்
பாய்விரித்த பசுந்தரையில் அமர்ந்தேன்; அந்தப்
பண்புடையாள் என்எதிரில் வந்தாள்; பார்த்தேன்!
"வாய்திறந்து பாடெ"ன்றே எந்தன் அன்னை
வனிதையிடம் உரைத்தவுடன் அன்னாள் மேனி
காய்கதிரின் வண்ணம்போல் சிவந்தே நொந்து
கண்வழியே நீர்உகுக்கக் கண்டேன் ஐயோ!

"இசைபாடத் தெரியாதோ! பரவா யில்லை!
இனிதாகப் பேசிடலாம்" என்றே மீண்டும்
இசைவுறவே என்அன்னை சொல்லும் போதில்
ஏந்திழையின் பெற்றோர்தான் அருகில் வந்து,
"வசையாக எண்ணாதீர், எங்கள் செல்வி
வாய்பேசாள்; ஊமை" யென உரைத்தார் ஐயோ!
அசையாத நிலையெய்தி நொந்தேன்; எந்தன்
அணுவெல்லாம் ஏமாற்றம் வந்தே தாக்கும்!

வண்ணமயில் பெண்ணாளின் மௌனத் துக்கு
வாய்த்தவொரு காரணந்தான் தெளிவே ஆக
எண்ணத்தில் இதயத்தில் இரக்கம் வந்தே
ஏந்திழையை மணம்புரியச் சொல்லும்; சொல்லும்!
பெண்ணரசி வாய்பேசாள் எனினும் அன்னாள்
பேசும்விழி தானுடையாள் அதுவே போதும்!
கண்ணழகி தனைமணப்பேன் என்றே சொன்னேன்,
கனிவுமிகும் என்பெற்றோர் ஊமை யானார்!

தமிழ்ப்பித்தன்

"அலைகடல் அடங்காது"

அன்பழகன் போர்முரசு!

'நாட்டின் எதிர்காலத்தை முன்னிட்டு தி. மு. கழகம் குமாரபாளையத்தில் ஒரு நல்ல முடிவை மேற்கொண்டிருக்கிறது; இதில் நாம் அவசரப்படாமல், டெல்லிக்கு இரண்டு மாதத் தவணை கொடுத்திருக்கிறோம்.

இந்த நாட்டில், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைவிட மிக முக்கியமான போராட்டம் வேறு எதுவும் இருக்கமுடியாது; இந்த நாட்டை ஆளும் சர்க்காரிடம் எங்களுக்கு நம்பிக்கை இல்லாததால்தான் நாங்கள் போராட்டத்தை நடத்த இருக்கிறோம். இந்தப் போராட்டத்தை சர்க்கார் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கட்டும்' என்று நாங்கள் சொல்லுகிறோம்.

"இந்தப் போராட்டம் காமராசர் ஆட்சியைக் கவிழ்ப்பதற்குத்தான் - என்று சில பேர் சொல்லுகிறார்கள். அதனால்தான் காமராசர் - அலைகடலைப் பார்த்து, 'அடங்கு' என்று சொன்ன கான்யூட் மன்னனைப் போல்-துப்பாக்கி இருக்கிறது' என்று அச்சுறுத்துவதன்மூலம் நம்மை அடக்கிவிட எண்ணுகிறார்போலும்!

"காமராசர் சர்க்கார் உடனே இங்குள்ள நிலைமைபற்றி டெல்லிக்குத் தந்திக் கொடுக்க வேண்டும்; தமிழ்நாட்டின் மானத்தைக் காக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இவர்கள் இதைச் செய்யாவிட்டால்-இந்த எட்டு அமைச்சர்களைப்போல் நாட்டுத் துரோகிகள் உலகத்திலேயே தோன்றியிருக்கமாட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்."

இந்தப் போராட்டம் திராவிட நாட்டு விடுதலைக்கு அடிப்படையான போராட்டம் என்பதை இங்கே இருப்பவர்கள் டெல்லி சர்க்காருக்கு அறிவித்தாக வேண்டும்.

"இந்தப் போராட்டம் நம்மை என்ன செய்துவிடும்? இவர்களை 6 மாதம், ஓராண்டுக்காலம் சிறையில் அடைத்துவிட்டால் போராட்டம் அழிந்துவிடாதா?-என்று ஆட்சியிலிருப்போர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அத்துடன் 'நம்மிடம் போலீசும், இராணுவமும் இருக்கின்றன; அவை, சுடச் சொன்னால் சுடும்' என்ற நம்பிக்கையில் காமராசர், 'சுட்டுவிடுவேன்' என்று வேறு சொல்லியிருக்கிறார்.

"எங்கள் வீட்டில் ஒரு குழந்தை, பொம்மைத் துப்பாக்கி ஒன்றை வைத்துக்கொண்டு, வேடிக்கையாக, 'சுட்டுவிடுவேன்' என்று சொல்லும்! காமராசர், 'சுட்டுவிடுவேன்' என்று சொன்ன செய்தியைப் பார்த்தவுடன், அந்தக் குழந்தையின் நினைவுதான் எனக்கு வந்தது. அந்தக் குழந்தை புத்திசாலியா, அல்லது காமராசர் புத்திசாலியா என்பதில் எனக்கு இன்னும் ஐயப்பாடு இருக்கிறது.

அந்தக் குழந்தை, 'துப்பாக்கி சுடும்' என்ற நம்பிக்கையில் சொல்லுகிறது; ஆனால் காமராசர் 55-வயதானவர்; பாவம், துப்பாக்கியை வைத்திருப்பவர்கள், சுடச் சொன்னால் சுடுவார்கள்' என்ற நம்பிக்கையில் அவ்வாறு சொல்லியிருக்கிறார். துப்பாக்கி இருப்பது சுடுவதற்குத்தான்; அதை நாங்கள் அறிவோம். ஆனால், துப்பாக்கிகள் எப்பொழுதும் சுடச் சொன்ன பக்கமே சுட்டுக்கொண்டிருந்ததில்லை! சுடச் சொன்னவர்கள் பெரிய அமைச்சர்கள் - அதிகாரிகள் என்பதினாலேயே துப்பாக்கிகள் சுட்டதில்லை! 'சுடச் சொன்ன பக்கம்தான் துப்பாக்கிகள் சுட்டன; இதற்கு மாறாக நடந்ததில்லை' என்று வேண்டுமானால் காமராசர் சொல்லக்கூடும்; காரணம், இதெல்லாம் அவருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை!

நான், அவர்களுக்குச் சொல்லுவேன்-துப்பாக்கி வைத்திருப்பவர்களை அதிகாரிகள், 'கிழக்கு நோக்கிச் சுடுங்கள்' என்றால், அவர்கள் அதற்கு மாறாக மேற்கு நோக்கிச் சுட்டிருக்கிறார்கள்; சுடச் சொன்னவர்களையே திருப்பிச் சுட்டிருக்கிறார்கள்! இதையெல்லாம் எண்ணிப் பார்க்காமல், 'எங்களிடத்தில் போலீசும், ராணுவமும், துப்பாக்கியும், சுடுவதற்கான அதிகாரமும் இருக்கின்றன' என்றால், செய்து பார்க்கட்டும். எங்களிடத்தில் துப்பாக்கியில்லை; ஆனால், துப்பாக்கியைவிட அழுத்தமான கொள்கையும், அழுத்தமான மன உறுதியும் இருக்கிறது!

வெண்பாப் போட்டி

1. எச்சரிக்கை காணீர் இது !

அச்சாணி இல்லாத நச்சான இந்தித்தேர்
முச்சாணும் ஓடாது முடர்காள் !-நிச்சயமாய்
நச்சரிக்கும் இந்தி நசுங்கும் ! மறைந்தோட
எச்சரிக்கை காணீர் இது.

—அ. மனப்போக்கன், சென்னை-23.

கச்சணிந்த கன்னியரும் கன்னித் தமிழுக்குச்
சச்சரவென் ருல்புலியாய்ச் சாடிடுவார் !-அச்சமின்றி
இச்சகத்தில் செந்தமிழை இந்தியினுல் மோதாதீர்
எச்சரிக்கை காணீர் இது !

—"செம்மீன்" சென்னை-12.

சிங்கத் தமிழ்மகன் சீறி எழுந்திட்டால்
இங்கொன்று மில்லை எதிர்த்துநிற்க - பொங்கியெழும்
நச்சரவத் தையும் நசுக்கிடுவோம் செந்தமிழர்
எச்சரிக்கை காணீர் இது !

—பத்மா, சென்னை-12.

அத்தான்அத் தானென் றகங்குழைந்து மார்பில்ஒளி
முத்தாரம் பூண்டு முகமலர்ந்து- தித்திக்கும்
பச்சைக் கொடியைப் பதைக்க விட்டுச் செல்லாதீர்
எச்சரிக்கை காணீர் இது !

—நாகநாதன், சென்னை-1.

தொண்டுக்கும் அஞ்சோம்; துளைக்கப் பறந்துவரும்
குண்டுக்கும் அஞ்சோம்; கொடிபிடிப்போம்;-தண்டமிழை
நச்சரவாம் இந்தி நசுக்குமெனில் ஆற்றியிரோம்
எச்சரிக்கை காணீர் இது.

– திருமாவளவன், புதுக்கோட்வட.

மெத்தப் படித்தாலும் மேன்மை யடைந்தாலும்
எத்திக்கும் போற்ற இருந்தாலும்- அத்தனையும்
துச்சமாய்ப் போய்விடுமே தூயொழுக்கம் இல்லாதார்க்
கெச்சரிக்கை காணீர் இது !

—செந்தாமரை, திண்டிவனம்.

வன்னெஞ்சங் கொண்டு வளர்தமிழைச் சாய்ப்பதற்கே
சின்னத் தனமாக இந்திதனைத்- தென்னகத்தில்
அச்சுறுத்திக் கொண்டுவந்தீர் ஆணவத்தைப் போக்கிடுவோம்
எச்சரிக்கை காணீர் இது !

—எ. எ. அமீது, திருச்சி.

இந்த உலகத் திணையில்லாப் பண்டையளாம்
செந்தமிழ்த் தாயின் திருநிலத்தில்- இந்தியெனும்
நச்சரவைக் கொண்டுவந்தால் நாங்கள் பொறுத்திரோம்
எச்சரிக்கை காணீர் இது !

—வி. சேவியர், செங்கல்பட்டு.

அதிகாரம் உண்டென்ற ஆணவத்தால் இந்தி
பொதுவாகச் செய்யப் புகுந்தீர்- மெதுவாக
இச்சணமே மாற்றி விடவில்லை யேல்தீதாம்
எச்சரிக்கை காணீர் இது !

—வணங்காமுடி, கோபி.

குழன்மாதர் தங்கள் கொழுநரெதிர் பார்த்து
விழிபூத்த வாசனிறை வீதி- வழிச்சென்று
கொச்சை புகல்வார்க்குக் கூற்ற மெனத்தோன்றும்
எச்சரிக்கை காணீர் இது !

—செல்வகுமார், திருநெல்வேலி.

வெல்லத் தமிழினிக்கும் வேண்டும் பலனளிக்கும்
நல்ல வளங்கொழிக்கும் நாட்டிலிந்திப்-புல்லர்காள் !
சச்சரவைக் கொண்டுவந்தீர் சாகத் துணிந்துவிட்டோம்
எச்சரிக்கை காணீர் இது !

—எஸ். கணபதி, சிதம்பரம்.

விழியும் இதழும்

இமை திறந்தது-விழி தெரிந்தது. அழகான சின்னஞ்சிறு வட்டம்! அது மின்னிற்று. மின்னலில் வைரம் தெறித்தது ! நட்சத்திரம் நெளிந்தது ! நீலோற்பலம் அசைந்தது ! ஒரே ஒளி வெள்ளம் ! !

இமை மூடிற்று-விழி மறைந்தது;

கணப்பொழுதுதான்-மீண்டும் இமை திறந்தது ! விழி தெரிந்தது ! !

ஒரு கோடியிலிருந்து மற்ருெரு கோடிக்கு அலை அலையாய்த் தாவுகின்ற பார்வைப் பெருக்கு ! அலையில் அசைவு போல், அசைவில் அழகுபோல் பொங்கி எழுகின்ற கவர்ச்சித் தேக்கம் !

மாங்கீற்றுப்போலக் கன்னங்கள்-அவற்றின் அருகில் விழி !

வானவில் போலப் புருவங்கள்-அவற்றின் கீழே மலர்ந்த விழிப் பூந்தோட்டம் !

விழி விளக்கன்று ! அது பரிதிக் கோளம்-நிலவு வட்டம் ! !

பாரதி சொன்னுன் : "சுட்டும் விழிச் சுடர்தான்...சூரிய சந்திரரோ?" என்று ! அவனுக்குத் தெரியும் ஒளியின் எல்லை ! ஆகவே கூறினுன் விழி சூரியன்தான் சந்திரன்தான் என்று ! அதற்கு மேலும் உவமை இருப்பதாக அவன் நினைக்கவில்லை.

காதலைப் பிறப்பிக்கும் உயிர் ! உலகையே உண்டாக்கும் உயிர் ! !

ஆங்கிலக் கவிஞன் ஒருவனும் கூறினுன்: "அவனுக்குக் கொடுப்பதற்கு அவளிடம் அதிகம் ஒன்றுமில்லை-ஆனுல் தரும்பொழுது அவள் விழிகளில் மட்டும் ஒளி வீசிற்று" என்று ! உண்மைதான்; அவள் தன் விழியை அதில் தேங்கும் காதல் ஒளியைப் பரிசென்று தந்துவிட்டாள் ! வேடிக்கை !

விழி ஒரு தனி உலகம்; அழகு உலகம் ! கலைஞர்களின் கனவுகள் வாழும் இன்ப உலகம் ! காதலர்களின் வெறி மோதும் மோகன உலகம் !

விழி ! விழி !-அதற்குப் பெயர் அழகு ! அழகு ! !

இமை மூடிற்று-விழி மறைந்தது !

கணப் பொழுதுதான்- மீண்டும் இமை திறந்தது ! விழி தெரிந்தது ! அமைப்பில் மாவடு; ஒளியில் பரிதிமதி; அழகில் உவமையில்லை ! கூற வேண்டுமானுல், அது கவிஞனின் காவியம் ! !

இமையால் கரைகட்டி, வெண்படலம் சேர்த்து நடுவே அச்சடித்த வட்டக் கருவிழி !

பொன் முகத்திலே இழைத்த சின்னஞ்சிறு மணித்துண்டு ! !

அமைப்பும் அழகும் ஒளியும் தெரிந்தன-அவைகளைக் கடந்து இப்போது உணர்ச்சி தெரிகிறது. அப்பப்பா, தென்றல் தோற்றுவிடும்; புயல் நடுங்கிவிடும் ! மாறி மாறிச் சுழலும் விந்தைக் காட்சிகள் ! !

காதலின்போது மருள்கிறது; செழிக்கிறது; ஈடு இணையற்று எதையும் தாண்டி மின்னுகிறது ! இமைகூடும் கடைசிக் கோடிக்கு வருகிறது. மீண்டும் மறுகோடிக்குத் தாவுகிறது. துள்ளுகிறது !

இமை மூடிற்று ! விழி மறைந்தது !

கணப்பொழுதுதான் - மறுபடியும் இமை திறந்தது - விழி தெரிந்தது ! இப்போது எங்கும் பனித்துளிகள் - பின்பு கடல்வெள்ளம் ! நடுவே விழித்துண்டு ! அது சோர்கிறது - மயங்குகிறது - தவிக்கிறது. ஏன் ? காதல் அழிந்ததா ? அன்பு ஒடுங்கியதா ? கனவு பாழாயிற்ரு ? ஆம் !

சிரித்தது அழுகிறது !

செழித்தது வாடுகிறது ! ஒரே விழிக் கூட்டில் உணர்ச்சியின் பல்லாயிரந் திவலைகள் !

நெஞ்சில் விழியில்லை !

விழியில் நெஞ்சிருக்கிறது !- அதனுல் தான் நினைத்தபோது சிரிக்கிறது - பின்பு நினைத்தபோது அழுகிறது !

விழியின் முதற்கதை. இன்பம்!

கடைசிக்கதை-அழுகை !

இமை மூடிற்று ! விழி மறைந்தது !

இதழ்-அதற்குத் திரையில்லை-இமையில்லை !

மூடப்படாமல் மின்னுகிறது; மறைக்கப்படாமல் மயக்குகிறது ! பூட்டி வைக்கப்படாத பொன் அது !

அசைந்தால் ஒளி தளும்புகிறது - திறந்தால் ஒலி எழும்புகிறது ! முன்னதற்குப் பெயர் புன்னகை ! பின்னதற்குப் பெயுர் சிரிப்பு ! சிரிப்பினும் புன்னகை அழகுமிக்கது - ஆற்றல் வாய்ந்தது !

இதழ்-ஒன்றின்மேல் ஒன்று தொடுத்திருக்கும் பூத்தொகுதி. அது சிரித்துச் சிரித்துச் செழிக்கும் ! செழித்துச் செழித்து மின்னும் !

திறந்து வைத்த தேன்குடம்; விரித்து வைத்த வெறிக் கவிதை ! சிரிப்பும் ஊறுகிறது ! இனிப்பும் ஊறுகிறது !- சிரிப்பில் சொக்கலாம் ! இனிப்பில் திளைக்கலாம் !

விழிக்கும் இதழுக்கும் நெருங்கிய உறவு !

இதழ் மலர்ந்தால் விழி மலரும் !

விழி கலங்கினுல் இதழ் வாடும் !

ஒன்றில் புன்னகை-இன்னென்றில் கண்ணீர் !

புன்னகையைக் கண்டால் கண்ணீர் அடங்கிவிடுகிறது.

கண்ணீரைப் பார்த்தால் புன்னகை அழிந்துவிடுகிறது.

ஏனெனில் சிரித்தால் இரண்டும் சிரிக்க வேண்டும் !

அழுதால் இரண்டும் துடிக்க வேண்டும்-இது நியதி !

இன்ப நேரங்களில் விழி இதழாகும்-இதழ் விழியாகும் ! ! இதைக் கலிங்கத்துப் பரணி கூறுகிறது !

விழி இல்லையேல் வைரத்தை நினைக்கமாட்டான் கவிஞன் !

இதழில்லையேல் கோவையை நினைக்காது அவன் உள்ளம் !

அவனுக்கு வெறி வேண்டும்: அந்த வெறியை விழி வழங்குகிறது !

இதழ் சிந்துகிறது; ஆகவே பிதற்றுகிருன் : "வைர விழி, கோவை இதழ் !" என்று !

வெறி இன்றேல் கவிதை இல்லை-காதலுமில்லை !

விழியும் இதழும் உள்ள வரையில் கவிதை வாழும் ! காதலும் வாழும் ! !

இப்போது இமை திறக்கிறது-விழி தெரிகிறது ! இதழும் மெல்ல மெல்லப் புன்னகை பூக்கிறது ! !

—நிலவுசேகரன்

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.
தொலைபேசி எண் 83510.